வானவில்

VAANAVIL

இதழ்130/131 | ஐப்பசி-கார்த்திகை 2021

ISSUE 130/131 | OCTOBER-NOVEMBER 2021

# மக்களின் பொருளாதார நெருக்கடிகளுக்குத் தீர்வு என்ன?




இலங்கை நிதியமைச்சர் பசில் ராஜபக்சாவினால் சமர்ப்பிக்கபட்ட 2022ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தின் இரண்டாவது வாசிப்பு நாடாளுமன்றத்தில் 93 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டுள்ளது. சஜித் பிமேரதாச தலைமையிலான 'ஐக்கிய மக்கள் சக்தி' என்ற எதிர்க்கட்சி அரசாங்கத்துக்கு எதிராக நாட்டின் பல பாகங்களில் மக்களைத் திரட்டி ஆர்ப்பாட்டங்கள் செய்து வருகின்ற போதிலும், அரசாங்கத்துக்கு நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டுக்கும் அதிகமான பெரும்பான்மை இருக்கிறது என்ற உண்மையை இந்த வாக்கெடுப்பு எடுத்துக் காட்டியுள்ளது.

வழமைபோல எதிர்க்கட்சிகள் இந்த வரவு – செலவுத் திட்டத்தை எதிர்த்து வாக்களித்துள்ளன. இருப்பினும் எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்துள்ள இரண்டு சிறுபான்மையினக் கட்சிகளான சிறீலங்கா முஸ்லீம் காங்கிரஸ் மற்றும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் என்பனவற்றின் தலைவர்களான ரவூப் ஹக்கீம், ரிசாத் பதியுதீன் ஆகியோர் வரவு – செலவுத் திட்டத்தை எதிர்த்து வாக்களித்திருந்தாலும், அவர்களது இதர அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் வரவு – செலவுத் திட்டத்துக்கு ஆதரவாக வாக்களித்துள்ளனர். உறுப்பினர்களின் இந்த நடவடிக்கை தலைவர்களின் மறைமுக ஆதரவுடன்தான் நடைபெற்றிருக்க வேண்டும் என்ற ஐயப்பாடு அரசியல் வட்டாரங்களில் நிலவுவதையும் காணக்கூடியதாக இருக்கின்றது. (முன்னரும் சில சந்தர்ப்பங்களில் இந்த உறுப்பினர்கள் அரசாங்கத்தை ஆதரித்து வாக்களித்திருந்த போதிலும் தலைமைகளால் அவர்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை என்பதும் நோக்கத்தக்கது)

இந்த முஸ்லீம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் வரவு – செலவுத் திட்டத்தை ஆதரித்து வாக்களித்திருப்பது இரண்டு விடயங்களைத் தெளிவுபடுத்துகிறது. ஒன்று, எதிர்க்கட்சி என்பதற்காக அரசாங்கம் கொண்டு வரும் நல்ல விடயங்களையும் எதிர்த்துக் கொண்டிருக்கக்கூடாது என்ற உயரிய சிந்தனை. இரண்டாவது, ஒரு சிறுபான்மை இனம் தமது உரிமைகளை அரசாங்கத்தை சதா எதிர்த்துக் கொண்டிருப்பதன் மூலம் பெற முடியாது என்ற புத்திசாலித்தனமான முடிவு, அவர்களின் இந்த யதார்த்தபூர்வமான நடவடிக்கை தொடர்ந்து மலட்டு அரசியல் செய்து வரும் தமிழ் கட்சிகளுக்கு ஒரு முன்னுதாரணமாகும்.

இம்முறை நிதியமைச்சரால் சமர்ப்பிக்கப்பட்ட வரவு – செலவுத் திட்டம் குறித்து அரசியல் கட்சிகள் மத்தியிலும், பொருளாதார விற்பன்னர்கள் மத்தியிலும் பல்வேறு விதமான அபிப்பிராயங்கள் நிலவினாலும், இம்முறை வரவு – செலவுத் திட்டம் கடந்த 44 வருடங்களாகச்

தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க…

**நூறு சிந்தனை மலரட்டும்**

# நற்செய்தியைத் தெரிவிக்கத்தவறிய மாநாடு

**1992** ஆம் ஆண்டு, உலக நாடுகள் 'பருவநிலை மாற்றத்துக்கான ஐக்கிய நாடுகள் கூட்டமைப்பு மாநாடு' (United Nations Framework Convention on Climate Change) என்னும் பெயரில் பிரேசிலில் ஒரு சர்வதேச ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன. பருவநிலை மாற்றம் தொடர்பான சவால்களை எதிர்கொள்ளவும், சமாளிக்கவும், தீர்வு காணவும், உலகளாவிய ரீதியில் சட்டங்களையும், விதிகளையும், வகுக்க இந்த ஒப்பந்தம் வழிவகுத்தது.

பிரேசிலில் நடந்த மாநாட்டில், "இயற்கை நமக்களித்த இந்தக் கொடையை மனிதர்களாகிய நாம் தவறாக பயன்படுத்தி இயற்கையின் அழிவுக்கு வழிவகுத்துக் கொண்டு இருக்கிறோம். இயற்கையையும் மக்களையும் ஆண்டு கொண்டிருக்கும் ஏகாதிபத்திய பேராசையில் இயற்கை வளம் அழிந்து கொண்டிருக்கிறது. முக்கிய உயிரியல் இனங்கள் அழிவை நோக்கி செல்கின்றன. இதைப்பற்றி பேச வேண்டிய தருணமிது. இப்போதும் இதை பேசவில்லை என்றால் மனித இனம் அழிவை சந்திக்க நேரிடும்" என்று மறைந்த கியூபா அதிபர் பிடல் காஸ்ட்ரோ உரையாற்றியிருந்தார்

ஐ.நாவினது முதலாவது பருவநிலை மாற்றம் குறித்த உச்சி மாநாடு 1995இல் ஜெர்மன் நாட்டின் பெர்லின் நகரில் நடைபெற்றது. அதன் பின்னர் பருவநிலை மாற்றம் தொடர்பான ஐ.நா.சபையின் உச்சி மாநாடுகள் ஒவ்வொரு ஆண்டும் நடத்தப்பட்டு வருகின்றன. 2020 ஆம் ஆண்டு கொரோனா தொற்றுக் காரணமாக இந்த மாநாடு நடத்தப்படவில்லை. அதனால் கடந்த ஒக்ரோபர் 31 முதல் நவம்பர் 12 ஆம் திகதிவரை ஸ்கொட்லாந்திலுள்ள கிளாஸ்கோ (Glasgow) நகரில் COP 26 என அழைக்கப்பட்ட இம்மாநாடு நடைபெற்றது. பிரித்தானியாவும் இத்தாலியும் கூட்டாக நடத்திய இந்த மாநாட்டில் இந்தியா, அமெரிக்கா, ஆஸ்திரேலியா, ரஷ்யா, சீனா, பிரேசில் உள்ளிட்ட 120 நாடுகள் கலந்து கொண்டன.

1880 – 2012 வரையான காலகட்டத்தில் பூமியின் சராசரி வெப்பநிலை 0.85 பாகை செல்சியஸாக அதிகரித்திருப்பதால், இந்த நூற்றாண்டின் இறுதிக்குள் இது 2 பாகை செல்சியஸாக அதிகரிக்குமென்றும் விஞ்ஞானிகள் தெரிவித்தார்கள். வெப்பநிலை 2 பாகை செல்சியஸாக அதிகரித்தால், வெப்ப அலைகளுக்கு முகங்கொடுக்க முடியாது நூற்றுக் கணக்கான மில்லியன் மக்கள் இடப்பெயர்வுகளை மேற்கொள்ள வேண்டி நேரிடும். அத்துடன் சிறு தீவுகள் கடலில் மூழ்குதல், கடலின் பவளப் பாறைகள் அழிதல், கடுமையான வெள்ளப் பெருக்கு, பயங்கரமான காட்டுத் தீ, பயிர் விளைச்சல் பொய்த்துப் போதல் போன்றவையும் நிகழலாம்.

பெற்றோலியம் மற்றும நிலக்கரி போன்ற நிலத்தடி எரிபொருட்களின் அளவுக்கதிகமான பாவனையால், அவற்றிலிருந்து வெளியேறும் பசுங்குடில் வாயுக்களே பூமி வெப்பமாவதற்குக் காரணமாகின்றன. பூமி வெப்பமாதலைக் கட்டுப்படுத்த பசுங்குடில் வாயுக்கள் வெளியேற்றத்தைக் குறைக்க வேண்டும் என்பதற்காக, 2015 இல் பாரிஸில் நடந்த மாநாட்டில் கலந்து கொண்ட உலக நாடுகள் அனைத்தும் உடன்பாடொன்றினை எட்டினார்கள். அந்த உடன்பாடு நவம்பர் 16, 2016 முதல் நடைமுறைக்கும் வந்தது. அதன்படி, தொழிற்புரட்சிக்கு முந்தைய சராசரி வெப்பநிலையைக் காட்டிலும், 2 பாகை செல்சியஸாக பூமியின் சராசரி வெப்பநிலை அடையாது தடுக்கவும், அதன் முதற்படியாக 1.5 பாகை செல்சியஸ் அளவுக்கு வெப்பநிலையைக் குறைப்பதற்கான முயற்சிகளை எடுக்கவும் தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

இதேவேளையில், பருவநிலை மாற்றங்களுக்கான பன்னாட்டு அரசாங்கங்களின் குழுவான ஐ.பி.சி.சி. (Intergovernmental Panel on Climate Change - IPCC) அமைப்பு தனது ஆய்வறிக்கை ஒன்றினை இவ்வருடம் ஓகஸ்ட் மாதம் வெளியிட்டது. அந்த அறிக்கையில் பாரிஸ் ஒப்பந்தத்தின்படி அனைத்து நாடுகளும் தங்களது பசுமை இல்ல வாயுக்களை கட்டுப்படுத்தினாலும் கூட, இந்த நூற்றாண்டின் இறுதியில் பூமியின் சராசரி வெப்பநிலையானது 3 பாகை செல்சியஸ் அதிகரிக்குமென எச்சரிக்கை விடப்பட்டது.

இந்த ஐ.பி.சி.சி அறிக்கை வெளியான பின்னர், விஞ்ஞானிகள் 2050 ஆண்டுக்குள் நிலத்தடி எரிபொருட்களின் பாவனையை நிறுத்தி, பூச்சிய காபனீரொட்சைட் வாயு வெளியேற்ற இலக்கை எட்டவேண்டுமென உலக நாடுகளிடம் எதிர்பார்த்தார்கள். குறிப்பாக நிலக்கரிப் பயன்பாட்டை முற்றிலுமாகக் கைவிடுவது குறித்து உறுதியாக முடிவெடுக்கப்படுமென எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால், உலகின் வளர்ச்சியடைந்த நாடுகளும், சீனா மற்றும் இந்தியா போன்ற நாடுகளும் இது தொட்பாக ஓர் உடன்பாட்டுக்கு வர முடியாததால், அவ்வாறான எந்த முடிவும் எடுக்கப்படவில்லை. மாறாக, நிலக்கரிப் பயன்பாட்டை 2050 இற்குள் முழுமையாக கைவிடுவது என்பதற்குப் பதிலாக, குறைப்பதெனத் தீர்மானம் இயற்றப்பட்டுள்ளது. அத்துடன் பிரேசில் உட்பட நூற்றுக்கு மேற்பட்ட நாடுகள் 2030 இற்குள் காடழிப்பை முடிவுக்குக் கொண்டு வருவதாக ஒப்புக் கொண்டமை, மீத்தேன் வாயு வெளியேற்றத்தைக் குறைக்க அமெரிக்காவும் ஐரோப்பிய ஒன்றியமும் உறுதியளித்தமை என்பன மாநாட்டில் எடுக்கப்பட்ட முடிவுகளில் மிக முக்கியமானவை.

'காலநிலை மாற்றம் தொடர்பான உச்சி மாநாட்டில் உலகத் தலைவர்கள் வெற்றுப் பேச்சை பேசியுள்ளனர். இந்த மாநாடு படுதோல்வி என்பதை யாருக்கும் சொல்லித் தெரியத் தேவையில்லை. இது ஒரு கண் துடைப்பு மாநாடு. விஞ்ஞானிகள் காலநிலை மாற்றம் தொடர்பாக அறிவியல் ரீதியாக முன்வைக்கும் உண்மைகளை உலகத் தலைவர்கள் புறந்தள்ள முடியாது. அதுபோலத் தான் அவர்கள் எங்களையும் புறக்கணிக்க முடியாது. உண்மையில் உலகத் தலைவர்கள் வழிநடத்துபவர்களாக இல்லை' என்று இந்த மாநாட்டின் போது கிளாஸ்கோ நகரில் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த கிரெட்டா துன்பெர்க் பேசியுள்ளார்.

பூமியின் வெப்பம் விரைவாக அதிகரிப்பதற்கு, விவாதத்திற்கும் சந்தேகத்திற்கும் இடமின்றி மனிதர்களே காரணம். பூமியின் வெப்பம், 1850–1900 ஆண்டு காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில், 2011–2020 காலப்பகுதியில் 1.09 பாகையாக உயர்ந்துள்ளது. பூமி வெப்பமாதலைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளை உடனடியாகச் செயற்படுத்தாவிட்டால் உலகம் தப்பிக்கவே இயலாது என்பதே ஜீரணிக்க முடியாத உண்மை. அனைத்து சக்திகளையும் ஒருங்கிணைத்தால் மாத்திரமே எம்மால் பருவநிலை மாற்றத்தால் ஏற்படும் பேரழிவை தவிர்க்க இயலும். அதனால், அந்த முயற்சியை எவ்வித தாமதமோ, எவ்வித காரணங்களுக்கோ இடம் கொடுக்காமல் உடனடியாகச் செய்தாக வேண்டும்.

**தொடர்பு மின்னஞ்சல் முகவரி:** sunvaanavil@gmail.com

'வானவில்' இதழுக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புபவர்களும், இதழ்களைப் பெற்றுக்கொள்ள விரும்புபவர்களும் மற்றும் அனைத்துத் தொடர்புகளுக்கும் மேலுள்ள மின்னஞ்சல் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்:

**வானவில்**

**இணையத்தளம்:** http://manikkural.wordpress.com/ **இந்த இணையத்தளத்தில் இதுவரையில் வெளிவந்த அனைத்து வானவில் இதழ்களையும் வாசிக்கலாம்.**

# வெறுப்பை அதிகரிக்கிறதா முகநூல்?

**மு**ன்னெப்போதும் இல்லாத அளவுக்கு முகநூலின் (Facebook) தீய விளைவுகள் தொடர்பாகக் கேள்விகளும் விவாதங்களும் விசாரணைகளும் தீவிரமடைந்துள்ளன. புகார்களுக்கும் குற்றச்சாட்டுகளுக்கும் நேரடியாகப் பதில் சொல்ல முடியாமல் உலகின் செல்வாக்கு மிக்க சமூக வலைப்பின்னல் சேவை நிறுவனம் தடுமாறிக்கொண்டிருக்கிறது.

முகநூலுக்குக்கு எதிரான தற்போதைய விமர்சன சூறாவளியின் மையமாக இருப்பவர் பிரான்சிஸ் ஹாகன் (Frances Haugen). முகநூல் நிறுவனத்தில் பணியாற்றிய முன்னாள் அதிகாரியான ஹாகன் அந்நிறுவனத்திலிருந்து விலகி, தவறுகளை அம்பலப்படுத்துபவராக மாறி வெளியிட்டுவரும் தகவல்களே இணைய உலகில் அதிர்வுகளை ஏற்படுத்திக்கொண்டிருக்கின்றன.

சமூக நலனையும் பயனாளிகள் நலனையும்விட வர்த்தக இலாபத்தையே முகநூல் முதன்மையாகக் கருதுகிறது என்பதே ஹாகனின் முக்கியக் குற்றச்சாட்டு. இணைய உலகில் முகநூலின் செல்வாக்கை மனதில்கொண்டு பார்க்கும்போது இந்தக் குற்றச்சாட்டின் தீவிரத்தை உணரலாம். இதற்கான ஆதாரங்களையும், தொடர்புடைய இன்ன பிற தகவல்களையும் அவர் பத்திரிகை மூலம் வெளியிட்டு, ஒட்டுமொத்த இணைய உலகையும் அதிர்ச்சியில் ஆழ்த்தியிருக்கிறார்.

**சர்ச்சை வரலாறு**

2018 ஆம் ஆண்டு வெடித்த கேம்பிரிட்ஜ் அனலிட்டிகா (Cambridge Analytica) விவகாரத்தில் தகவல்களை விளம்பர நோக்கில் அறுவடை செய்வதில் முகநூல் தீவிரமாக இருப்பதும், இதன் விளைவாகப் பயனாளிகளின் தனியுரிமை கேள்விக்குள்ளாவதும் பெரும் விவாதத்தை ஏற்படுத்தியது. முகநூலின் இலாப நோக்கிலான செயல்பாடுகள் கடும் விமர்சனத்துக்கு உள்ளாகி, ‘முகநூலை விட்டு வெளியேறுவோம்’ (#Delete Facebook) எனும் இணைய எதிர்ப்பு இயக்கத்துக்கும் இந்த சர்ச்சை வித்திட்டது. இந்த சர்ச்சைக்கு மத்தியில், 2016 அமெரிக்கத் தேர்தலில் முகநூல் பயன்படுத்தப்பட்ட விதமும் விவாதப் பொருளானது. முகநூலின் தகவல் அறுவடை உத்திகள் மூலம், குறிப்பிட்ட இலக்கு வாக்காளர்களைக் குறிவைத்துப் பிரச்சாரம் செய்ய முகநூல் பயன்பட்டதாகவும், இந்தப் பிரச்சாரத்தில் பொய்ச் செய்திகள் முக்கியப் பங்கு வகித்ததாகவும் குற்றம்சாட்டப்பட்டது.



Frances Haugen

## சைபர் சிம்மன்

இதன் தொடர்ச்சியாக முகநூல் தனது நியூஸ்ஃபீடில் (News Feed) தகவல்களைத் தோன்றச் செய்யும் விதமும், அதற்குப் பின்னே உள்ள அல்கரிதத்தின் (algorithm) செயல்பாடும் விமர்சனத்துக்கு உள்ளாயின. முகநூல் தவறான தகவல்களையும் பொய்ச் செய்திகளையும் பகிர்வதற்கான கூடாரமாக மாறிவிட்டதாகவும் புகார்கள் எழுந்தன. இதனிடையே, 2021 அமெரிக்கத் தேர்தல் முடிவை ஏற்காமல் அப்போதைய அதிபர் ட்ரம்ப்பின் ஆதரவாளர்கள் கேபிட்டல் (Capitol) பகுதியில் கட்டவிழ்த்துவிட்ட வன்முறைக்கும் முகநூல் பயன்படுத்தப்பட்ட விதம் கண்டனத்துக்கு உள்ளானது.

**முகநூல் கோப்புகள் (Facebook Files)**

மேலும், மியான்மர் உள்ளிட்ட நாடுகளில் வன்முறையையும் துவேஷத்தையும் தூண்டும் கருத்துகளையும் பொய்ச் செய்திகளையும் பகிர்ந்துகொள்ளும் வாகனமாக முகநூல் விளங்குவது தெரியவந்தது. இது போன்ற குற்றச்சாட்டுகள் குவிந்த நிலையில், முகநூல் தனது மேடையில் தோன்றும் கருத்துகளை நெறிப்படுத்துவதில் போதிய பொறுப்புணர்வைக் காட்டுவதில்லை எனும் விமர்சனமும் பலரால் முன்வைக்கப்பட்டது. இந்தப் பின்னணியில்தான் முகநூல் மீதான புதிய குற்றச்சாட்டுகள் வெளியாகத் தொடங்கின. அமெரிக்காவின் ‘தி வால் ஸ்ட்ரீட் ஜர்னல்’ (The Wall Street Journal) நாளிதழில் இவை முதலில் வெளியாகத் தொடங்கின. முகநூலின் துணைச் சேவையான இன்ஸ்டாகிராம் (instagram), இளம் பெண்களின் ஆரோக்கியத்துக்குத் தீங்கு விளைவிக்கிறது என்பதை நன்கு அறிந்திருந்தும் முகநூல் அது தொடர்பாக மாற்று நடவடிக்கைகள் எடுக்காமல், பாதிப்பு ஏற்படுத்தும் உத்திகளைத் தொடர்ந்து மேற்கொண்டுவருகிறது என்பது இந்தக் குற்றச்சாட்டின் மையம்.

குழந்தைகளுக்கான இன்ஸ்டாகிராம் சேவையை முகநூல் அறிமுகம் செய்ய இருப்பதாக வெளியான தகவல், கடும் கண்டனத்துக்கு உள்ளான சூழலில், இந்தத் தகவல் வெளியானது. இதற்கு ஆதாரமாக முகநூல் நிறுவனத்துக்குள் பயன்படுத்தப்பட்ட ஆய்வுக் குறிப்புகளையும், தகவல் பரிமாற்றங்கள் உள்ளிட்ட ஆவணங்களையும் அந்த நாளிதழ் ஆதாரமாக வெளியிட்டிருந்தது. முகநூலின் நியூஸ்ஃபீடை இயக்கும் அல்கரிதம் பயனாளிகளிடமிருந்து கோபமான எதிர்வினையைத் தூண்டும் தகவல்களை முன்னிறுத்தும் வகையில் அமைந்திருப்பதாகவும், இதை முகநூல் தெரிந்தே தொடர்ந்து செய்துவருவதாகவும் மற்றொரு முக்கியக் குற்றச்சாட்டும் இந்த நாளிதழில் வெளியானது. பயனாளிகளை அதிக நேரம் முகநூலில் தங்கியிருக்கச் செய்வதே இதன் நோக்கம் என்றும்

இந்தச் செய்தியில் கூறப்பட்டது.

**விசிலூதி (Whistleblower) ஹாகன்**

முகநூலின் தாக்கத்தையும், அதன் வர்த்தக நோக்கிலான செயல்பாட்டையும் அம்பலப்படுத்திய இந்தத் தகவல்கள் முகநூல் கோப்புகள் எனக் குறிப்பிடப்பட்டன. இந்நிலையில்தான், இந்தத் தகவல்களைத் துணிந்து வெளிப்படுத்திய நபர் யார் எனும் விவரம் வெளியானது. அமெரிக்கத் தொலைக்காட்சி ஒன்றுக்கு அளித்த பேட்டியில், முகநூலின் முன்னாள் அதிகாரியான பிரான்சிஸ் ஹாகன், தன்னை விசிலூதியாக அறிமுகம்செய்துகொண்டு மேலும் பல திடுக்கிடும் தகவல்களை வெளியிட்டார். முகநூல் நிறுவனத்தின் செயல்பாடுகளால் வெறுத்துப்போய், அதிலிருந்து விலகியதாகவும் கூறினார். முகநூலில் இருந்து வெளியேறும் முன், அதன் மோசமான செயல்பாடுகளை உணர்த்தும் ஆதாரங்களை அவர் கவனமாகத் திரட்டிக்கொண்டார். இப்படித் திரட்டிய ஆதாரங்களே முகநூல் கோப்புகளாக இணைய உலகில் சூறாவளியை உண்டாக்கின. இதைத் தொடர்ந்து, அமெரிக்க நாடாளுமன்றத் துணைக் குழுவின் முன் அவர் ஆஜராகி, முகநூலின் மோசமான செயல்பாடுகள் தொடர்பாக விளக்கம் அளித்தார். இதே போல பிரிட்டனில் நடைபெறும் விசாரணையிலும் சாட்சியம் அளித்திருக்கிறார். முகநூலின் தீய விளைவுகளைத் துணிந்து அம்பலப்படுத்தியதற்காக அமெரிக்காவின் ‘நவீன நாயகி’ (modern-day heroine) என்றும் ஹாகன் பாராட்டப்படுகிறார்.

முகநூல் மீதான இந்தக் குற்றச்சாட்டுகளில் பெரும்பாலானவை ஏற்கெனவே சொல்லப்பட்டு, விவாதிக்கப்பட்டுவருபவைதான். முகநூலின் நியூஸ்ஃபீட் முன்னிறுத்தும் தகவல்களின் சார்பும், பல சமூகங்களில் இவை ஏற்படுத்தும் தாக்கமும் வல்லுநர்களால் தொடர்ந்து கவலையோடு விவாதிக்கப்படும் விஷயமாக இருக்கின்றன. ஹாகன், முகநூலின் ஆவணங்களையும் அதன் சொந்த ஆய்வுக் குறிப்புகளையும் கொண்டு, இந்தக் குற்றச்சாட்டுகளுக்கு வலுசேர்த்திருக்கிறார் என்பதே விஷயம்.

**நடவடிக்கை என்ன?**

இந்த அளவுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் முகநூல் நிறுவனம் மீது எடுக்க வேண்டிய நடவடிக்கை தொடர்பான கேள்விகளும் தீவிரமடைந்துள்ளன. முகநூலின் செயல்பாடுகள் தொடர்பான நாடாளுமன்ற நிலைக்குழுவின் விசாரணை ஒருபக்கம் இருக்க, நிறுவனத்தின் ஏகபோக நிலையைக் குறைக்க அதன் துணை நிறுவனங்களைத் தனி நிறுவனங்களாக ஆக்குவது பற்றியும் பரபரப்பாகப் பேசப்படுகிறது. இதனிடையே இந்தியாவிலும் துவேஷம், வன்முறை சார்ந்த உள்ளடக்கத்தை நெறிப்படுத்துவது தொடர்பாக முகநூல் நடந்துகொண்டவிதம் குறித்துத் திடுக்கிடும் தகவல்கள் வெளியாகியிருக்கின்றன. அது மட்டுமல்லாமல், செல்வாக்கு மிக்க பயனாளிகளுக்காக முகநூல் தனது விதிகளையும் நெறிமுறைகளையும் தளர்த்திக்கொள்ளும் வழக்கத்தைக் கொண்டுள்ளதாகவும் தகவல் வெளியானது. இந்தக் குற்றச்சாட்டுகளுக்கு முகநூலின் பதில் பலவீனமாகவே இருக்கிறது. ஹாகன் சர்ச்சைக்கு முகநூல் பதிவு மூலம் விளக்கம் அளித்த முகநூலின் தலைமை நிர்வாகி மார்க் ஸக்கர்பேர்க் (Mark Zuckerberg), நிறுவனம் தவறாகச் சித்தரிக்கப்படுகிறது என்றும், நிறுவனம் பயனாளிகளின் நலனைவிட இலாப நோக்கில் செயல்படுவதாகச் சொல்லப்படுவதை மறுத்தும் பதிவிட்டிருந்தார். ஆய்வுகளை முகநூல் அலட்சியம் செய்கிறது என்றால், இத்தகைய ஆய்வுகளை அது ஏன் நடத்த வேண்டும் என்றும் அவர் கேட்டிருந்தார்.

**முழு விவாதம்**

ஆக, முகநூல் மீதான விவாதமும் விசாரணையும் தீவிரமாகியுள்ள நிலையில், இது முகநூல் என்ற தனி நிறுவனம் தொடர்பான பிரச்சினை மட்டும் அல்ல, உண்மையில், இணைய யுகத்தில் சகல துறைகளிலும் ஆதிக்கம் செலுத்தும் ‘பிக் டெக்’ (Big Tech) எனக் குறிப்பிடப்படும் முகநூல், கூகுள், ஆப்பிள், அமசோன், மைக்ரோசொப்ட் போன்ற பெரிய நிறுவனங்களை உள்ளடக்கிய பிரச்சினை இது என்று இணைய வல்லுநர்கள் கூறுகின்றனர். பெரிய தொழில்நுட்ப நிறுவனங்களின் தகவல் அறுவடை - அல்கரிதம் செயல்பாடு தொடர்பான விளைவுகளை நெறிப்படுத்தும் வகையில் கட்டுப்பாடுகள் கொண்டுவரப்பட வேண்டும் என்றும் அவர்கள் வலியுறுத்துகின்றனர். இதனிடையே முகநூல் தனது பெயரை மாற்றிக்கொண்டு, மெய்நிகர் உலகம் சார்ந்த தொழில்நுட்ப மேடையில் கவனம் செலுத்த இருப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. ஆக, முகநூல் தனது வளர்ச்சியில் அடுத்த கட்டப் பாய்ச்சலுக்குத் தயாராகிக் கொண்டிருக்கிறது. மாறிவரும் உலகில் வளர்ச்சியைத் தக்க வைப்பதற்கான எதிர்கால உத்திகளை வகுப்பதில் கவனம் செலுத்துகிறது. முகநூல் போன்ற எல்லாம் வல்ல இணைய நிறுவனங்களுக்குக் கடிவாளம் போடுவதற்கான செயல்களும் இதற்கு ஈடுகொடுக்க வேண்டும் என்பதே இணைய வல்லுநர்கள், செயற்பாட்டாளர்களின் கருத்தாக இருக்கிறது.

# வினாடிக்கு 1,000 டொலர்கள் இலாபமீட்டும் தடுப்பூசி நிறுவனங்கள்

**பை**சர், பயொஎன்டெக், மொடர்னா (Pfizer, BioNTech, Moderna) ஆகிய மருந்தாக்க நிறுவனங்கள், அவற்றின் கொவிட்–19 மருந்துகளின் மூலம் நிமிடத்துக்கு மொத்தம் 65,000 டொலர் இலாபம் ஈட்டுவதாகக் கூறப்படுகிறது. இந்த நிறுவனங்கள் அவற்றின் தடுப்புமருந்தில் பெரும்பாலானவற்றைப் பணக்கார நாடுகளுக்கு விற்றுள்ளதாக நம்பப்படுகிறது. அதன் காரணமாக ஏழை நாடுகளில் தடுப்பு மருந்துக்குப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாக மக்கள் தடுப்புமருந்து கூட்டணி எனும் அமைப்பு தெரிவித்துள்ளது.

இந்த 3 மருந்தாக்க நிறுவனங்களும் இவ்வாண்டு மட்டும் மொத்தம் 34 பில்லியன் டொலர் இலாபம் ஈட்டலாம் என அந்த அமைப்பு ஊகித்துள்ளது. அப்படியானால் வினாடிக்கு அவை 1,000 டொலர் இலாபம் ஈட்டுகின்றன.

குறைந்த வருமானம் கொண்ட நாடுகளின் மக்களில் சராசரியாக இரண்டு வீதத்தினருக்கு மட்டுமே முழுமையாகத் தடுப்பூசி போடப்பட்டுள்ளது.

இவ்வேளையில் இந்த மருந்தாக்க நிறுவனங்கள் அவ்வளவு பெரிய இலாபம் ஈட்டுவது தவறு என பலரும் சாடியுள்ளனர். இந்த நிறுவனங்கள் தடுப்புமருந்து சார்ந்த வர்த்தக ஏகபோகத் தன்மையைக் கொண்டு இலாபம் ஈட்டுவதில் மட்டுமே கவனம் செலுத்துகின்றன என்றும் ஏழை நாடுகளுக்கு உதவும் எண்ணத்தில் இல்லை என்றும் அவர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

# ‘ஜெய் பீம்’ படத்தில் வரும் ராஜாக்கண்ணு கொலைவழக்கு உண்மையில் நடந்தது என்ன?

***(சூர்யா, மணிகண்டன், லிஜோமோல் ஜோஸ், ரஜிஷா விஜயன், பிரகாஷ்ராஜ் ஆகியோர் நடித்த ‘ஜெய்பீம்’ திரைப்படம் அண்மையில் வெளியாகியுள்ளது. இது குறித்து தற்போது சகல ஊடகங்களிலும் அதிகம் விவாதிக்கப்பட்டு வருகின்றது. பழங்குடி மக்கள் மீது அதிகாரம் எப்படி தன் ஆதிக்கத்தைச் செலுத்தியது, அதில் எளிய மக்கள் எப்படி பாதிக்கப்பட்டார்கள், அதனை அவர்கள் சட்ட போராட்டத்தின் மூலம் எப்படி எதிர்கொண்டார்கள் என்கிற ஒரு உண்மை சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டு ‘ஜெய் பீம்’ திரைப்படம் எடுக்கப்பட்டுள்ளது)***



**க**டலூர் மாவட்டம் விருதாச்சலம் ஒன்றியத்திலுள்ள கம்மாபுரம் அருகில் உள்ளது முதனை கிராமம். இந்தப் பகுதியில் கூடை பின்னும் தொழிலில் ஈடுபட்டு வந்த குரும்பர் பழங்குடிச் சமூகத்தைச் சேர்ந்த நான்கு குடும்பங்கள் 1970களிலிருந்து அங்கு வாழ்ந்து வந்தனர். குரும்பர்கள், வேட்டை, மேய்ச்சல் போன்ற தொழிலில் ஈடுபடுபவர்கள். வில் எய்வது இவர்கள் முன்னோர் தொழில்.

1990களின் மத்தியில், சுற்றுவட்டார கிராமங்களில் வயல் அறுவடைக் காலங்களில் குடும்பத்தோடு கூலி வேலைக்குச் செல்வது அவர்களது உபதொழிலாக இருந்துவந்தது.

1993ஆம் ஆண்டில் மார்ச் மாதத்தில், கம்மாபுரத்திற்கு அருகிலுள்ள கோபாலபுரம் என்ற கிராமத்துக்கு இந்தக் குரும்பர் பழங்குடியினர் கூலி வேலைக்காகச் சென்றனர். அந்த ஊரில் தங்கியிருந்து விவசாயக் கூலி வேலைகளைச் செய்து, நெல்லைக் கூலியாகப் பெற்றுக்கொண்டு, சிலநாட்கள் கழித்து முதனை கிராமத்திற்குத் திரும்பியிருக்கிறார்கள்.

இந்தச் சமயத்தில் கோபாலபுரத்திலுள்ள ஒரு வீட்டில் அன்றைய கணக்கில் சுமார் 1.5 இலட்சம் மதிப்புள்ள 43.5 பவுன் தங்க நகை மற்றும் ரூபாய் 1,141/- பணம் திருடுபோனது. இந்த வழக்கு தொடர்பாகக் கம்மாபுரம் காவல் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டதும், வயலில் கூலிவேலை செய்ய வந்த குரும்பர் பழங்குடிமக்களைத் தேடிப்பிடித்து விசாரணைக்கு இழுத்துச் சென்றனர் கம்மாபுரம் காவலர்கள். (Crime No.107 of 1993 under Sections 457 and 380 I.P.C. - 20.3.1993)

போலீஸ் காவலில் ராஜாக்கண்ணு என்ற பழங்குடி இளைஞர், அவரது சகோதரர், சகோதரி மற்றும் மைத்துனர் கடுமையாகச் சித்திரவதை செய்யப்பட்டனர். ராஜாக்கண்ணு வின் மனைவி, அவர்கள் எந்தக் குற்றமும் செய்யவில்லை எனக் கெஞ்சியபோது, அவரும் காவலர்களால் அடித்துத் துன்புறுத்தப்பட்டார்.

**எஸ்.ராகவன்**

மறுநாள், ராஜாக்கண்ணுவுடன் கைது செய்யப்பட்டவர்கள் காவல்நிலையத்திலிருந்து தப்பியோடிவிட்டதாகவும் அவர்கள் கம்மாபுரத்துக்குத் திரும்பவந்தால் உடனே போலீஸில் சொல்ல வேண்டும் என்றும் ராஜாக்கண்ணு மனைவியிடம் மிரட்டும் தொனியில் போலீஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

அடித்துத் துன்புறுத்தப்பட்ட தன் கணவர் காவல் நிலையத்திலிருந்து தப்பியோட வாய்ப்பில்லை என்றும், அவரைப் போலீஸார்தான் என்னவோ செய்துவிட்டார்கள் என்றும் அழுது தீர்த்த ராஜாக்கண்ணுவின் மனைவி, கடலூர் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினர் உதவியை நாடினார். ஆர்.டி.ஓ, டி.எஸ்.பி தொடங்கி மாவட்ட ஆட்சியர் வரைக்கும் புகார் கொடுத்துப் பார்த்தார்.

1993 இல் அளிக்கப்பட்ட அவரது புகாரின்மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாத நிலையில், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில், போலீஸார் விசாரணையில்தான் ராஜாக்கண்ணு அடித்துக் கொலை செய்யப்பட்டார் என்றும், அதற்கு நீதி விசாரணை வேண்டுமென்றும் தொடர் போராட்டங்கள் நடத்தப்பட்டன. ஆனாலும் வெகுநாள்கள் கழித்தே இந்த வழக்கு நீதிமன்றத்துக்கு வந்தது. (S.C.No.183 of 1995).

அப்போது சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கறிஞராக இருந்த (தற்போது பணி ஓய்வு பெற்றுள்ள நீதிபதி) திரு. கே. சந்துரு அவர்களின் உறுதுணையுடன் சென்னை உயர் நீதிமன்றத்தில் ராஜாக்கண்ணு உட்பட மூவரின் நிலை குறித்து அறியத் தொடரப்பட்ட வழக்கில் பாதிக்கப்பட்ட பழங்குடியின மக்கள் சாட்சியம் அளித்தனர். காவல்துறை சார்பில் தங்கள் மீது போடப்படும் பொய்வழக்குகள் குறித்தும் நீதிமன்றத்தில் எடுத்துரைத்தனர்.

1996 இல் (அதிமுக ஆட்சிக் காலம் முடிந்த பிறகு) சென்னை உயர் நீதிமன்றம் ஓர் இடைக்காலத் தீர்ப்பளித்தது. பாதிக்கப்பட்ட குடும்பத்தினருக்கு அரசு சார்பில் 3 சென்ட் நிலம், ரூ.2.65 இலட்சம் நிவாரணம் வழங்க உத்தரவிடப்பட்டது. கூடுதலாக இந்த வழக்கு குறித்து சென்னை உயர் நீதிமன்றம் இட்ட உத்தரவுப்படி சிபிசிஐடி விசாரணையும் ஏற்படுத்தப்பட்டது.

சிபிசிஐடி விசாரணையில் அரியலூர் மாவட்டம் ஜெயங்கொண்டானிலிருந்து காட்டுமன்னார் கோயில் செல்லும் பாதையில் உள்ள மீன்சுருட்டி அருகே ஓர் அடையாளம் தெரியாத ஆண் சடலம், ஏறத்தாழ ராஜாக்கண்ணுவின் அங்க அடையாளங்களுடன் விபத்தில் சிக்கியதாகக் கண்டெடுக்கப்பட்டு அரசு மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டது தெரியவந்தது.

இந்த முக்கியமான தடயத்தை மேலும் விசாரித்தபோது, அது ராஜாக்கண்ணுவின் உடல் என்று கண்டறியப்பட்டது. அதன் பின்னரே ராஜாக்கண்ணு மனைவியின் வழக்கு கொலைவழக்காக மாற்றப்பட்டது.

முதலில் கடலூர் நீதிமன்றத்திலும் பின்னர், விருதாச்சலம் விரைவு நீதிமன்றத்திலும் நடந்த இந்த வழக்கில், ராஜாக்கண்ணு காவல் நிலையத்தில் போலீசாரால் தாக்கப்பட்டு, கொல்லப்பட்டார் என்றும், காவலர்கள் சாட்சியங்களை மிரட்டினர் என்றும், அதற்கு தண்டனைச்சட்டம் பிரிவு 354இன் கீழ் அவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் என்றும் முன்வைக்கப்பட்டது.

'ஆட்கொணர்வு மனு' மூலம் இந்த வழக்கு தொடங்கப்பட்டிருந்தாலும், இரண்டு அமர்வு வழக்குகளில் விசாரணையைத் தொடங்கினாலும், 1995இல் (SC.183) பதியப்பட்ட வழக்கின் கீழ் தண்டனை விதிக்கப்பட்டதால் அதை வைத்து மேல்முறையீடு செய்து குற்றவாளிகள் சிலருக்கு விடுதலையும் கிடைத்திருந்தது.

ஆனால், 1997ல் சிபிசிஐடி பதிவு செய்த கூடுதல் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டு, (S.C No.150 of 1997) அந்த வழக்கின் விசாரணைகளும் 1995ஆம் ஆண்டின் முந்தைய வழக்கோடு தொடர்புபடுத்தப்பட்டது. அந்த விசாரணையின் முடிவில், நீதிபதிகள் ஆர். பாலசுப்பிரமணியன், ஏ.சி.ஆறுமுகப்பெருமாள் ஆதித்யன் ஆகியோர் அமர்வு, 2006-ஆம் ஆண்டில் ராஜாக்கண்ணு வழக்கில் தீர்ப்பு வழங்கியது.

20-3-1993 அன்று ராஜாக்கண்ணு மீது நகைத்திருட்டு குற்றச்சாட்டின் பேரில் பொய்வழக்கு போடப்பட்டது. அவரது மனைவி (சாட்சி-1) சகோதரி (சாட்சி-6), மைத்துனர் (சாட்சி-3) உள்ளிட்டோர் குற்றத்தை ஒப்புக்கொள்ளச் செய்ய காவலர்களால் கொடூரமாகத் தாக்கப்பட்டனர்.

அன்று முழுவதும் நடந்த காவல்துறை சித்ரவதைக்குப் பிறகு, இரவு 11.00 மணிக்கு வீட்டுக்குப் புறப்பட்டுச் சென்ற தலைமைக் காவலர், மறுநாள் மாலை மூன்று மணிக்கு ராஜாக்கண்ணு நிலை கவலைக் கிடமானதும் அவரது மனைவியை வலுக்கட்டாயமாகக் காவல் நிலையத்திலிருந்து அப்புறப்படுத்தினார். உடன் சாட்சிகளான பழங்குடிகள் 5 பேருக்கு தலா 10/- ரூபாய் பணம் கொடுத்து அவரவர் வீடுகளுக்கு அனுப்பி வைத்துள்ளனர் காவல் துறையினர். மாலை 6.00 மணிக்கு முதனை கிராமத்திற்குத் திரும்பிய ராஜாக்கண்ணுவின் மனைவிக்கு, மாலை 4.15 மணிக்கே ராஜாக்கண்ணு தப்பி ஓடிவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. விருதாச்சலம் பேருந்து நிலையத்தில் ராஜாக்கண்ணுவைப் பார்த்ததாகவும் போலீஸ் தரப்பில் சாட்சி உருவாக்கப் பட்டது. (Crime No.114 of 1993 on 26.3.1993 at about 10.00 p.m. under the caption "man missing")

ராஜாக்கண்ணுவுக்கு வேலை அளித்த, அரிசி ஆலை அதிபர் கோவிந்தராஜூ தொடர்ந்து அலைக்கழிக்கப்பட்டு, அவரும் ராஜாக்கண்ணு தப்பிச் சென்றதற்கான போலீஸ் தரப்பின் சாட்சியாக்கப்பட்டார். (ஆனால் வழக்கு விசாரணையின்போதே கோவிந்தராஜூ இறந்துவிட்டார்).

ராஜாக்கண்ணு மனைவி, அவரது குடும்பத்தினர் மற்றும் கம்யூனிஸ்ட் கட்சியினரின் தொடர் முயற்சிகளைத் தடுக்க, 'களவுபோன நகைகளை எங்கே வைத்திருக்கிறாய்' என ராஜாக்கண்ணு மனைவி மற்றும் குழந்தைகள் மீண்டும் போலீஸாரால் துன்புறுத்தப்பட்டனர். பழங்குடியினரான ராஜாக்கண்ணு மனைவி மற்றும் அவரது தரப்பு சாட்சிகளை ஆடைகளை அவிழ்க்க வைத்து சித்திரவதை செய்தனர். எல்லாத் துன்பங்களுக்கு மத்தியிலும் சட்டப்போராட்டத்தை அவர்கள் கை விடவில்லை.

வழக்கு சிபிசிஐடி கைக்கு மாறிய பிறகே, 23.3.1993 அன்று மீன்சுருட்டியில் ஒரு கோவிலுக்கு அருகிலுள்ள பொது இடத்தில் ராஜாக்கண்ணுவின் சடலம் அடையாளம் காணப்பட்டது. சென்னை கும்பகோணம் சாலையில் உள்ள ஸ்டுடியோ ஒன்றின் மூலம் எடுக்கப்பட்ட புகைப்படங்களின் வழியாக, காவல் நிலையத்தில் காயங்களுடன் பார்த்த தன் கணவர் ராஜாக்கண்ணுவை முதன் முதலாக அதுவும் இறந்த நிலையில் புகைப்படமாகப் பார்த்தார் அவரது மனைவி.

ராஜாக்கண்ணு தடுப்புக்காவல் மரணத்துக்குக் காரணமானதோடு, அவரது சடலத்தை அப்புறப்படுத்தியது, சாட்சிகளை மிரட்டித் துன்புறுத்தியது, தடயங்களை அழித்தது ஆகிய குற்றச் செயல்களில் ஈடுபட்ட கம்மாபுரம் காவலர்கள் 5 பேருக்கு (A1, A2, A3, A4, A5) 14 ஆண்டுகள் சிறைத்தண்டனையும், அரசு மருத்துவமனை மருத்துவருக்கு (A6) மூன்று ஆண்டுகள் சிறைத்தண்டனையும் வழங்கி, விருதாச்சலம் விரைவு நீதிமன்றம் தீர்ப்பளித்தது. இவர்கள் தவிர, இந்த வழக்கில் தொடர்புடைய ஓய்வுபெற்ற டி.எஸ்.பி, கம்மாபுரம் காவல்நிலைய ஆய்வாளர் உள்பட 12 பேரைக் கைது செய்து சிறையில் அடைக்க நீதிமன்றம் உத்தரவிட்டது.

ஏறத்தாழ 13 ஆண்டுகள் நீண்ட சட்டப்போராட்டம் நடத்திய ராஜாக்கண்ணுவின் மனைவி மற்றும் குடும்பத்தினருக்கு இறுதிவரை உறுதுணை புரிந்தவர் அப்போதைய கம்மாபுரம் ஒன்றிய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் செயலாளராக இருந்த கோவிந்தன் அவர்கள். இந்த வழக்கில் வெற்றி பெறும் வரை அவர் திருமணமே செய்து கொள்ளவில்லை. தீர்ப்பு வந்த 2006ஆம் ஆண்டில் அவரது 39ஆம் வயதில்தான் அவருக்குத் திருமணம் நடைபெற்றது.

பல்வேறு மிரட்டல்கள், சமரசப் பேச்சுவார்த்தைகள், அதிகார மீறல்கள் அனைத்தையும் மீறி இந்த வழக்கில் வாதாடி நீதி பெற்றுத் தந்ததில் வழக்கறிஞர் திரு. கே.சந்துருவின் பங்களிப்பு மிகவும் முக்கியமானது, அசாத்தியமானதும் கூட.!

தன் கணவனுக்கு நிகழ்ந்த அநீதி, தன் சமூகத்தவர்களுக்கு இழைக்கப்படும் அநியாயம் இனி தன்னைச் சுற்றியுள்ள மற்ற எந்த மக்களுக்கும் நடைபெறக்கூடாது என்று அன்றைக்கு நீதிமன்றத்தின் படியேறிய ராஜாக்கண்ணுவின் மனைவியின் நிஜப்பெயர் பார்வதி . 76 வயதான அவர் இன்றும் விருத்தாச்சலம் முதனை கிராமத்தில் வசித்து வருகிறார்.

# சந்தைகள் இன்று மிக மோசமான இரக்கமற்ற தன்மையைக் காண்பிக்கின்றன!

**-அமைச்சர் வாசுதேவ நாணயக்கார**

“நிதியமைச்சர் பசில் ராஜபக்ஸ இம்முறை சமர்ப்பித்துள்ள வரவு செலவுத் திட்டம் ‘அசாதாரண’ ஒன்றாகவும், மரபுக்கு அப்பாற்பட்டதாகவும் இருக்கின்றது” என ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவரும், அமைச்சருமான வாசுதேவ நாணயக்கார குறிப்பிட்டிருக்கிறார். ஊடகங்களிடம் மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

வரவு செலவுத் திட்டம் மக்களைக் கூடுதலாகப் பாதிக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் வகையில் சில பிரேரணைகளை முன் வைத்துள்ளது. வரவு செலவுத் திட்டத்தில் விவசாயத்துறைக்கு பெரும் தொகையான பணம் ஒதுக்கப்பட்டுள்ளதால், அது நாட்டின் உற்பத்திப் பொருளாதாரத்துறைக்கு ஒரு அத்திவாரத்தை இடக்கூடியதாக இருக்கும்.

நாம் கூடுதலாக வர்த்தக அல்லது சேவைத்துறைப் பொருளாதாரத்தில் தங்கி நிற்கிறோம். இந்த இடத்தில் சில விடயங்களைச் சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது.

சந்தைச் சக்திகள் தமது முடிவுகளைத் தாமாகவே எடுக்க அனுமதிக்கப்பட்டுள்ளனர். சந்தைகள் எந்தவிதமான கட்டுப்பாடுகளும் இன்றி சுதந்திரமாக விடப்பட்டுள்ளன. சந்தைகள் இன்று விலைகளைக் கண்டபடி அதிகரித்து, இலாபத்தைப் பெருக்கி, மிகவும் இரக்கமற்றவையாக நடந்து கொள்கின்றன.

வருமானம் குறைவாகப் பெறுவோர், சம்பளங்களில் மட்டும் தங்கியிருப்போர்



ஆகியோர் – அவர்கள் தமது 4 பேர் கொண்ட குடும்பம் ஒன்றுக்கு மாதாந்தம் 50,000 ரூபா ஈட்டிய போதிலும் – பெரும் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர். நிலைமை மிகவும் பதட்டமான நிலையில் உள்ளது.

எனவே, அரசாங்கம் வர்த்தகத்துறையில் தலையிட்டு கூட்டுறவு அமைப்புகள் மூலம் மொத்த வியாபாரத்தையும், சில்லறை வியாபாரத்தையும் கையாள்வதன் மூலம், மக்களுக்கு அத்தியாவசியப் பொருட்களை நியாயமான முறையில் கிடைக்கச் செய்ய வேண்டும். விலை அதிகரிப்பின் மூலம் வாழ்க்கைச் செலவைச் சமாளிக்க முடியாத மக்களுக்கு உடனடியாக நிவாரணம் வழங்க வேண்டும்.

இந்த நிவாரணப் பொதி எப்படிச் செயல்படும், எவ்வளவு காலத்துக்குச் செயல்படும் என்பது தெரியவில்லை. இது என்னத்தை உள்ளடக்கியுள்ளது, எவ்வளவு தொகை மக்கள் இதனால் பயன் பெறுவார்கள் என்பதும் எங்களுக்குத் தெரியாது. நாம் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டியுள்ளது.

இருந்தபோதிலும், தற்போதைய விலை மட்டங்களைப் பார்க்கும்போது, மட்டுப்படுத்தப்பட்ட வருமானம் உள்ளவர்களால் இதைச் சமாளிக்க இயலாது. எனவே அப்படியானவர்களுக்காக அரசாங்கம் சில விடயங்களைச் செய்துதான் ஆக வேண்டும்.

டொலர் நெருக்கடி எதிர்பார்த்ததை விட கூடுதலான டொலர் பற்றாக்குறையை ஏற்படுத்தியுள்ளது. கடந்த வருடம் சுற்றுலாத்துறை மோசமாக வீழ்ச்சி கண்டதால் இலங்கை டொலர் பற்றாக்குறையை எதிர்நோக்கியுள்ளது. அதே நேரத்தில் டொலரில் சம்பாதிப்பவர்கள் அதை நாட்டுக்குக் கொண்டு வருவதில்லை. அவர்கள் டொலரின் மதிப்பேறுத்தை வைத்து அதிக ரூபாய்கள் சம்பாதிப்பதற்காக காத்திருக்கிறார்கள். ரூபாயின் மதிப்பு மேலும் இறங்கும் என அவர்கள் கருதுவதால் அந்த நேரத்தில் தமது டொலர்களுடன் வந்து அதிக ரூபாய்களை ஈட்டுவதற்காகக் காத்திருக்கிறார்கள்.

இந்த விடயங்கள் கவனத்தில எடுக்கப்பட்டு சரி செய்யப்பட வேண்டும். எவ்வளவு தூரம் அரசாங்கம் இதைச் செய்யும் என எனக்குத் தெரியவில்லை. ஆனால் எமக்குத் தேவையான டொலர்களை ஈட்டுவதற்கு நாம் உறுதி செய்து கொள்ள வேண்டும்.

# முன்னைய அரசாங்கம் திட்டமிட்டே மாகாண சபைத் தேர்தல்களை தள்ளிப் போட்டது!

**-அமைச்சர் ஜி.எல்.பீரிஸ்**

முன்னைய ‘நல்லாட்சி’ அரசாங்கம் திட்டமிட்ட வகையிலும், தந்திர நோக்கத்துடனுமே மாகாண சபைத் தேர்தல்களை நடத்தாது ஒத்தி வைத்து வந்துள்ளது என வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் பாராளுமன்றத்தில் தெரிவித்திருக்கிறார். புதிய சட்டங்கள் நிறைவேற்றப்பட்டதும் விரைவில் மாகாண சபைகளுக்கான தேர்தல் நடத்தப்படும் எனவும் அவர் கூறியிருக்கிறார்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் மகாண சபைத் தேர்தல் குறித்து எழுப்பிய கேள்வி ஒன்றுக்குப் பதில் அளிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு கூறியிருக்கிறார். அமைச்சர் பீரிஸ் மேலும் கூறுகையில்:

புதிய சட்டத்தை நிறைவேற்றாமல் மாகண சபைகளுக்கான தேர்தலை நடத்த முடியாது என சட்ட மா அதிபர் கருத்துத் தெரிவித்திருக்கிறார். முன்னைய அரசாங்கம் புதிய சட்டத்தை அறிமுகப்படுத்தாமலே நடைமுறையில் இருந்த மாகாண சபைகள் சட்ட மூலத்தை ஒழித்துக்கட்டியது.

**தொடர்ச்சி 9ம் பக்கம் பார்க்க...**

# சூடானின் இராணுவச் சதியும் அதன் ஏகாதிபத்தியப் பின்னணியும்!



ஆபிரிக்க நாடான சூடானில் இராணுவ ஜெனரலான அப்தெல் ஃபத்தா அல் புர்ஹான் (General Abdel Fattah al – Burhan) என்பவர் இராணுவ சதி நடவடிக்கை ஒன்றின் மூலம் ஆட்சியைக் கைப்பற்றியுள்ளார். இராணுவ சதியை நடத்திய பேர்கான் தன்னை அரச தலைவராக அறிவித்துள்ளதுடன், ஆட்சியில் இருந்த அரசாங்கத்தின் பிரதமரான அப்துல்லா ஹம்டொக்கையும், அவரது அமைச்சரவை உறுப்பினர்களையும் கைது செய்துமுள்ளார்.

இந்த இராணுவச் சதிக்கு எதிராகவும், மீண்டும் நாட்டில் சிவிலியன் ஆட்சியை அமைக்கக் கோரியும் சூடானிய மக்கள் நாடு முழுவதும் பெரும் ஆர்ப்பாட்டங்களை நடத்தி வருகின்றனர்.

ஆபிரிக்காவில் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடத்தில் அமைந்துள்ள சூடானில் நிகழ்ந்து வரும் புரட்சிகரப் போராட்டங்களை நசுக்குவதற்காகவே இந்த இராணுவச் சதிக்குப் பின்னால் அமெரிக்கா இருந்து செயற்பட்டுள்ளதாக குற்றச்சாட்டுகள் எழுந்திருக்கின்றன. இந்தச் சதிக்குப் பின்னால் அமெரிக்காவின் பணம், புலனாய்வு முகவரகங்கள், முதலாளித்துவ ஊடகப் பிரச்சாரம், அரச சார்பற்ற நிறுவனங்கள் என்பன செயற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சூடான் எண்ணெய், இயற்கை வாயு, தங்கம் மற்றும் பல வளங்களை அபரிமிதமாகக் கொண்ட ஒரு நாடு. வரலாற்று ரீதியாக மேற்குலக சக்திகளால் சூடானைப் பிளவுபடுத்தி நிலைகுலைய வைப்பதற்கான முயற்சிகள் பல தடவைகள் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளன.

தற்போதைய இராணுவச் சதியை சூடான் கம்யூனிஸ்ட் கட்சியும் அதன் தலைமையிலான தொழிற்சங்கங்களும் மற்றும் ஆசிரியர்கள், வைத்தியத்துறையினர், சிவில் சேவை உத்தியோகத்தர்கள் கொண்ட சூடான் வாண்மையாளர் சங்கமும் வன்மையாகக் கண்டித்துள்ளதுடன், மக்களை வீதிகளில் இறங்கி ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுமாறும் வேண்டுகோள் விடுத்துள்ளன. அடிப்படையான ஒன்றுபட்ட மக்கள் குரலாக “மீண்டும் சிவிலியன் ஆட்சி அமைக்கப்பட வேண்டும்” என்ற கோசம் உள்ளது. அதை அடைவதற்கான வழிமுறையாக இராணுவச் சட்டத்தை ஏற்காதிருத்தல் என்ற யுக்தி கைக்கொள்ளப்படுகிறது. அத்துடன் பாடசாலைகள், தொழிற்சாலைகள், சிவில் சேவை, தேசிய விமான சேவை என்பனவற்றில் பணிப் பகிஸ்கரிப்பு, வேலை நிறுத்தங்கள் என்பன நடைபறுகின்றன. இந்த நடவடிக்கைகளின் இணைப்பை முறியடிப்பதற்காக இராணுவம் எல்லாவிதமான இணையத்தள சேவைகளையும் முடக்கி வைத்துள்ளது.

சூடானில் 2018 டிசம்பரில் மாபெரும் மக்கள் எழுச்சி ஒன்று ஏற்பட்டது. அப்போது அமெரிக்கா விதித்திருந்த பொருளாதாரத் தடையால் உருவாகிய பொருளாதார நெருக்கடி, உணவுப் பொருட்களின் விலையேற்றம், அதிகரித்த பண வீக்கம் என்பனவற்றுக்கு எதிராகவும், பிரிவினைவாத இயக்கங்களுக்கு எதிராகவுமே அந்த மக்கள் எழுச்சி ஏற்பட்டது. இந்த மக்கள் எழுச்சியில் பல மில்லியன் கணக்கான தொழிலாளர்கள், விவசாயிகள், இடையர்கள், வாலிபர்கள் மற்றும் ஒடுக்கப்பட்ட தேசிய இனத்தவர்கள் ஈடுபட்டனர். இந்தக் கிளர்ச்சிக்கு இராணுவத்திற்குள் இருந்த ஒரு பிரிவினர் தலைமை ஏற்றதுடன், 1989 முதல் ஆட்சியில் இருந்த இராணுவ ஜெனரலான ஜனாதிபதி ஓமர் அல் - பசீர் (Omar al – Bashir) என்பவரையும் கைது செய்தனர்.

மில்லியன் கணக்கான மக்களின் எழுச்சியைத் தடுப்பதற்காக 2019இல் வர்த்தகர்கள், அரசியல் கட்சிகள், இராணுவத்தினர் இணைந்து ஒரு சபையை அமைத்ததுடன், 2022இல் தேர்தலை நடத்தி மக்களால் தெரிவு செய்யப்படும் ஒரு அரசாங்கத்தை அமைப்பது எனவும், அதுவரை இடைக்கால அரசாங்கம் ஒன்றினால் நாட்டை நிர்வகிப்பது எனவும் உடன்பாட்டுக்கு வந்தனர். இந்தச் சந்தர்ப்பத்தில் 2019 யூன் 3ஆம் திகதி அமைதியான முறையில் இராணுவ தலைமையகத்துக்கு முன்னால் சத்தியாக்கிரகம் இருந்த மக்கள் மீது கொலைவெறித் தாக்குதல் நடத்தப்பட்டது. இத் தாக்குதலில் 100 பொதுமக்கள் கொல்லப்பட்டதுடன், பல்லாயிரக்கணக்கானோர் காயமடைந்தனர். இந்தத் தாக்குதல் இராணுவத்தில் இருந்த தளபதி பேர்ஹானின் ஆதரவு சிப்பாய்களாலேயே நடத்தப்பட்டது. அதற்குக் காரணம், இடைக்கால அரசாங்கத்தில் இராணுவத்தின் பங்கை போராட்டத்தில் ஈடுபட்டிருந்த அமைப்புகள் நிராகரித்தமையாகும்.

அமெரிக்கா ஏறத்தாழ 30 ஆண்டுகளாக சூடான் மீது பொருளாதாரத் தடைகளை விதித்து அந்நாட்டை நிலைகுலைய வைக்க முயன்று வந்துள்ளது. 1998இல் அமெரிக்கா ஏவுகணைத் தாக்குதல் நடத்தி அந்நாட்டின் ஒரேயொரு மருந்து உற்பத்தித் தொழிற்சாலையைத் தாக்கியழித்தது. அது மாத்திரமின்றி, இஸ்ரேல் அமெரிக்காவின் ஆதரவுடன் சூடான் மீது பல ஆண்டுகளாக விமானத் தாக்குதலை நடத்தி வந்துள்ளது. அத்துடன் அமெரிக்கா சூடானில் இயங்கி வந்த பல பிரிவினைவாதக் குழுக்களுக்கு ஆதரவளித்து அந்நாட்டை துண்டுளாக சிதறடிக்க முயன்றும் வந்துள்ளது.

2005இல் சூடானுக்கும் தென் சூடானுக்கும் இடையில் சமாதான உடன்படிக்கை உருவானபோது, அமெரிக்கா உடனடியாகவே தென் சூடானை அங்கீகரித்தது. 2019இல் சூடானின் ஸ்திரமற்ற கூட்டரசாங்கம் தனது பொருளாதார நெருக்கடிகளைத் தீர்த்து தன் மக்களுக்கு நிவாரணமளிப்பதற்காக தனது நாட்டின் மீதான பொருளாதாரத் தடையை நீக்குமாறு அமெரிக்காவிடம் வேண்டியது. ஆனால் அமெரிக்காவின் ஜனாதிபதிகளாக இருந்த - இருக்கின்ற ட்ரம்போ அல்லது பைடனோ அதற்கு செவிமடுக்கவில்லை.

கடந்த இரண்டு ஆண்டுகளாக சூடானின் அரசாங்கம் கைச்சாத்திட்ட சில உடன்படிக்கைகள் சூடானுக்கு உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் பல தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளது. அதில் ஒன்று நீண்டகாலமாக பாலஸ்தீனத்தை ஆதரித்து வந்த சூடான் இஸ்ரேலை அங்கீகரித்தமையாகும். இருந்தும் இஸ்ரேல் சூடான் மீது விமானத் தாக்குதல் நடத்துவதை நிறுத்தவில்லை.

அமெரிக்கா சூடானை "பயங்கரவாதத்துக்கு அனுசரணை வழங்கும் அரசு" என அழைத்து வந்துள்ளது. 2019இல் சூடான் பிரதமர் ஹம்டொக் அமெரிக்காவுக்கு விஜயம் மேற்கொண்டு தனது நாட்டின் மீதான தடைகளை நீக்கக் கோருவதற்கு சலுகையாக சூடான் அரசு பாலஸ்தீன தொண்டு நிறுவனங்களுக்கு ஆதரவு வழங்கும் நிறுவனங்களைத் தடை செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டது. அத்துடன் சூடானில் இருந்த ஹமாஸ் இயக்கத்தின் சொத்துக்களைப் பறிமுதல் செய்ய வேண்டியுமிருந்தது. அதுமாத்திரமின்றி, ஹிஸ்புல்லா இயக்க ஆதரவாளர்களை சூடானில் இருந்து வெளியேற்ற வேண்டியும் இருந்தது. காஸாவில் இருந்து சூடானில் பல்கலைக்கழகப் படிப்பு மேற்கொண்டவர்களை நிறுத்தவேண்டி ஏற்பட்டது.

சூடானின் இடைக்கால அரசாங்கம் சில ஆபிரிக்க நாடுகளில் "பயங்கரவாத தாக்குதல்களால் பாதிக்கப்பட்டவர்கள்" என அழைக்கப்பட்ட அமெரிக்க குடும்பங்களுக்கு 335 மில்லியன் டொலர்கள் இழப்பீடாக வழங்கும் ஒப்பந்தத்தில் கைச்சாத்திடவும் வைக்கப்பட்டது. உண்மையில் இந்தத் தாக்குதல்கள் சூடானிய மண்ணில் நடைபெற்றிருக்கவில்லை. சூடானுக்கு கிடைக்கவிருந்த 700 மில்லியன் டொலர் கடனில்தான் இந்த இழப்பீட்டுக் தொகை வழங்கப்பட்டது. அமெரிக்காவின் "பொருளாதார நிவாரண" நிதியில் அரைவாசி அமெரிக்காவுக்கே இவ்வாறு திருப்பி வழங்கப்பட்டது.

சூடான் வழங்கிய சலுகைகளுக்கு பிரதியீடாக அமெரிக்க வர்த்தகத் திணைக்களம் சூடான் "வர்த்தகத்துக்காக திறக்கப்பட்டுள்ளது" என ஜனவரி 19இல் அறிவித்தது. ஆனால் சூடான் மீதான தடைகளில் சிலவற்றையே அமெரிக்கா நீக்கியுள்ளது. இன்னும் சில தடைகள் நீக்கப்படாமல் இருக்கின்றன. காரணம், அமெரிக்கா மேலும் சில நிபந்தனைகளை நிறைவேற்றக் கோருவதற்கு ஏதுவாக அவை நீடிக்க வைக்கப்பட்டுள்ளன.

சூடானின் கூட்டரசாங்கம் மார்ச்சில் அமெரிக்காவின் 'வின்ஸன் சேர்ச்சில்' என்ற ஏவுகணை நாசகாரி கப்பலை தனது நாட்டுத் துறைமுகத்தில் "வரவேற்க" நிர்ப்பந்திக்கப்பட்டது. அதற்கு முதல் 30 ஆண்டுகளாக அமெரிக்க போர்க் கப்பல்கள் எதுவும் சூடானுக்குள் அனுமதிக்கப்படவில்லை.

சூடானின் சீரழிந்த பொருளாதாரத்தை மீட்பதாகச் சொல்லிக்கொண்டு சர்வதேச நாணய நிதியம் அங்கு அமெரிக்க ஆதரவுடன் நுழைந்துள்ளது. நாணய நிதியம் மக்களுக்கு சலுகை அடிப்படையில் வழங்கப்பட்டு வந்த எரிபொருளையும் உணவுப் பொருட்களையும் நிறுத்தச் சொல்லி யூன் மாதம் நிபந்தனை விதித்தது. அதன் காரணமாக அவற்றின் விலைகள் ஒரே இரவில் இரண்டு மடங்காகியதுடன், பணவீக்கமும் ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக தற்பொழுது சூடானிய மக்கள் தமது வாழ்க்கையைக் கொண்டு நடத்துவதற்காக ஐ.நாவினதும், அமெரிக்காவினதும் "தொண்டு" நிறுவனங்களில் தங்கிநிற்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

சூடான் தனது அபிவிருத்திக்காக உபகரணங்களையும் தொழில்நுட்பத்தையும் வாங்க வேண்டிய தேவையுள்ளது. அதன் காரணமாக சர்வதேச நாணய நிதியம் போன்றவற்றின் வங்கிக் கடன்களை நாட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இந்தச் சூழ்நிலையில் சர்வதேச உதவியைப் பொறுத்தவரையில் சீனாவிடமிருந்து மட்டுமே உதவி கிடைத்துள்ளது. சீனா சூடானில் உள்கட்டுமானம், போக்குவரத்து தொழில்நுட்பம் என்பனவற்றுக்கு உதவி வழங்கி வருகின்றது.

சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளை ஏற்று சூடானின் இடைக்கால அரசாங்கம் மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு எதிராக அங்கு மாபெரும் மக்கள் போராட்டங்கள் நடந்து வருகின்றன.

அமெரிக்காவின் நோக்கம் சூடானை மட்டும் கட்டுப்படுத்துவதல்ல. அதற்கும் அப்பால் முழு ஆபிரிக்காவையும் மீண்டும் நவ காலனியாக்குவதே அமெரிக்காவின் நோக்கமாகும். ஆனால் சூடானில் நடைபெறும் மக்கள் போராட்டம் அமெரிக்காவின் கனவை நிர்மூலம் செய்வதுடன், அமெரிக்காவின் ஏகாதிபத்திய அமைப்பையே ஆட்டம் காண வைப்பதாகவும் அமையக்கூடும்.

(இக்கட்டுரை அமெரிக்காவிலிருந்து வெளியாகும் இடதுசாரி சஞ்சிகை ஒன்றில் வெளியான கட்டுரை ஒன்றைத் தழுவி எழுதப்பட்டதாகும்)

**7ம் பக்கத்தொடர்ச்சி...**

பின்னர் அவர்கள் தேர்தல் முறையில் உடன்பாடு ஏற்படாமல் மாகாண சபைத் தேர்தலை நடத்த முடியாது என வாதிட்டனர்.

நாம் அமைச்சர் தினேஸ் குணவர்த்தன தலைமையில் அமைத்துள்ள குழு புதிய சட்ட மூலத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கும் வேலைகளில் மும்முரமாக ஈடுபட்டுள்ளது. அந்தக் குழு வாரம் இருமுறை கூடி புதிய சட்ட மூலத்தைத் தயாரித்து வருகின்றது. நாம் ஒரு சிறந்த சட்ட மூலத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து நிறைவேற்றியதும் மாகாண சபைத் தேர்தலை நடத்துவோம்.

இவ்வாறு அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

## *வர்க்கம் என்றால் என்ன?*

'ஒரே விதமான வாழ்நிலையும், அந்த வாழ் நிலையிலிருந்து பிறக்கும் ஒரே விதமானசிந்தனைகளையும் கொண்ட மனித குழுக்கள் வர்க்கங்கள் எனப்படுகின்றன'

**–தோழர் ஏவின் மனோ**

# இந்திய அரசுக்கு எதிராக தொடரும் விவசாயிகளின் போராட்டம்

**இ**ந்திய மத்திய அரசு கொண்டு வந்த 3 விவசாயச் (வேளாண்) சட்டங்களை திரும்பப் பெறப்படுவதாக இந்தியப் பிரதமர் மோடி *19.11.2021* அன்று அறிவித்துள்ளார். மோடி அரசின் இந்த அறிவிப்புக்கு காரணமானது தலைநகர் டெல்லியில் கடந்த ஓராண்டு காலம் இடைவிடாது போராடி வரும் விவசாய பெருங்குடி மக்களின் தியாகம்தான். இருப்பினும், நாடாளுமன்றத்தில் வேளாண் சட்டங்களை முறைப்படி திரும்பப் பெறும்வரை போராட்டம் தொடரும் என விவசாயிகள் அமைப்பினர் தெரிவித்தனர்.


கடந்த ஆண்டு (2020) நவம்பர் 26ந் திகதி டெல்லிக்கு வந்து நேரடியான போராட்டத்தை விவசாயிகள் தொடங்கினார்கள். ஓராண்டு காலத்தை எட்டுவதற்கு சரியாக ஏழு நாட்களே உள்ள நிலையில் மோடியின் அறிவிப்பு வெளியாகியுள்ளது. போராட்டத்தின் ஓராண்டு நிறைவையொட்டி மாபெரும் போராட்டத்தை முன்னெடுப்பதற்கு விவசாய சங்கங்கள் தயாராகியும் வந்தன என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில் விவசாயிகளின் போராட்டம் நவம்பர் 26 இற்குப் பின்னர் இன்னும் வேகம் கொள்ளலாம் என்பது தெரிந்தோ, அல்லது நாட்டில் நடக்க இருக்கும் சில மாநிலச் சட்டப்பேரவைத் தேர்தல்களை மனதில் வைத்தோ, பா.ஜ.க அரசு இந்த முடிவை எடுத்திருக்கலாம்.

விவசாயிகளின் இந்தப் போராட்டத்தில் மோடி தலைமையிலான பாரதிய ஜனதாக்கட்சியின் சர்வாதிகார அரசை பணியவைக்க 750 உயிர்களுக்கு மேல் பலி கொடுக்கவேண்டி இருந்தது. கடுங்குளிரையும் வெயிலையும் பொருட்படுத்தாதும், இராணுவ ரீதியிலான வீதித்தடுப்புகள், அச்சுறுத்தல்கள், மிரட்டல்கள் மற்றும் கொலைத் தாக்குதல்களை எதிர்கொண்டும் விவசாயிகள் சளைக்காது உறுதியுடன் போராடி வருகிறார்கள்.

சர்வாதிகார அரசொன்றினைப் பணிய வைக்க எவ்வளவு உறுதியான கடுமையான போராட்டங்கள் தேவையென உணர்த்தி நிற்கின்றது இந்த விவசாயிகளின் போராட்டம்.

முப்பதாண்டுகளுக்கும் மேலாக விவசாயிகள் இயக்கத்தை முன்னின்று நடத்தி வருகின்ற இந்தியாவின் மிகப்பெரிய விவசாயிகள் அமைப்பான



**கலாநிதி அசோக் தவாலே**

அகில இந்திய விவசாயிகள் சங்கத்தின் தேசியத்தலைவர் கலாநிதி அசோக் தவாலே (Ashok Dhawale). அகில இந்திய விவசாயிகள் சங்கம் (AIKS) ஐக்கிய விவசாயிகள் முன்னணியின் (சம்யுக்த கிசான் மோர்ச்சா – Samyukta Kisan Morcha: SKM) முன்னணி அமைப்புகளில் ஒன்றாக இருந்து வருகின்றது.

விவசாயிகள் போராட்டத்தின் தலைவர்களில் ஒருவரான தவாலே சென்னையிலிருந்து வெளியாகும் ஃப்ரண்ட்லைன் (FRONTLINE) இதழுக்கு *24.09.2021* அன்று அளித்த நேர்காணலிலிருந்து சில பகுதிகள் கீழே தரப்படுகின்றன.

**தமிழில்: தா.சந்திரகுரு**

**இந்திய மக்கள் தொகையில் மூன்றில் இரண்டு பங்கினர் விவசாயத்தை நம்பியே வாழ்ந்து வருகின்றனர். பொருளாதார தாராளமயமாக்கல் கொள்கைகளைச் செயல்படுத்துவதற்குப் பதிலாக, விவசாயத் துறையில் கவனம் செலுத்தி நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்துவதற்கு மாறாக, இன்றுவரையிலும் தொடர்கின்ற வேளாண் நெருக்கடிக்குள் இந்தியா படிப்படியாகக் சிக்கிக் கொண்டுள்ளது. இதுபற்றி உங்களுடைய கருத்துகளைக் கூறுங்களேன்.**

சுதந்திரம் அடைந்து எழுபத்தைந்து ஆண்டுகளுக்குப் பிறகும் இந்திய மக்கள்தொகையில் மூன்றில் இரண்டு பங்கு மக்கள் தங்கள் வாழ்வாதாரத்திற்காக விவசாயத்தை நம்பியிருப்பதே இந்திய விவசாயத்தின் துயரம் மற்றும் நெருக்கடிக்கான அறிகுறியாக இருக்கிறது. இந்தியப் பொருளாதாரத்தின் கட்டமைப்பு மாற்றத்தை விரைவுபடுத்த பொருளாதார தாராளமயமாக்கல் தவறி விட்டது. விவசாயத்தில் மோசமான வளர்ச்சியின் காரணமாக, விவசாயக் குடும்பங்களில் பாதிக்கும் மேற்பட்டவர்கள் வறுமைக் கோட்டுக்குக் கீழே தவித்து வருகின்றனர். கிராமப்புறத் தேவைகளுக்கு நிரந்தரமான முக்கியத்துவம் அளிக்கப்படுவதில்லை. கிராமப்புற மக்களின் வாங்கும் சக்தியில் வளர்ச்சி எதுவும் ஏற்படவில்லை. விளைவாக விவசாயத்துறையில் ஏற்பட்டுள்ள மோசமான வளர்ச்சி தொழில்துறையின் வளர்ச்சியையும்கூட மிகவும் மோசமாகப் பாதித்திருக்கிறது.

விவசாயம் என்று வரும்போது, கேரளா, மேற்கு வங்கம், திரிபுரா ஆகிய மாநிலங்களுக்கு அப்பால் வேளாண் சீர்திருத்தங்கள் முழுமையாக இல்லாததாலும், கிராமப்புற உள்கட்டமைப்பில் அரசின் மோசமான பொது முதலீடுகளாலும் வரலாற்றுரீதியாகவே இந்திய விவசாயம் என்பது மிகவும் மோசமான நெருக்கடி நிலையில் இருந்து வருகிறது. விளைவாக இந்தியாவில் இருக்கின்ற கிராமப்புற ஏற்றத்தாழ்வுகள் உலகிலேயே மிக அதிக அளவிலே இருக்கின்றன. ஏற்கனவே கிராமப்புற சமூகத்தில் இருந்து வந்த அத்தகைய முரண்பாடுகள் *1991*க்குப் பிறகு வேளாண் சமூகத்தை மூழ்கடித்திருக்கும் நெருக்கடியால் மிகவும் மோசமாக்கப்பட்டுள்ளன. வேளாண் வளர்ச்சி விகிதம் குறைந்துள்ளது. அரசின் பொது முதலீடும் குறைந்துள்ளது. உள்ளீட்டு மானியங்கள் குறைக்கப்படுவதால், இடுபொருள் விலை அதிகரித்திருக்கிறது.

தடையற்ற வர்த்தக உடன்படிக்கைகள் மக்களைக் கொள்ளையடிக்கும் இறக்குமதியின் பெரும் வரவுக்கே வழிவகுத்துக் கொடுத்துள்ளன. அதன் விளைவாக பல பொருட்களின் விலை வீழ்ச்சியடைந்ததால், அனைத்து பயிர்களின் லாப விகிதம் சுருங்கிவிட்டது. விவசாயக் கடன்கள் சிறு, குறு விவசாயிகளிடமிருந்து பணக்கார மற்றும் பெருநிறுவன வேளாண் வணிக நிறுவனங்களை நோக்கித் திருப்பி விடப்படுகின்றன. கடந்த முப்பதாண்டுகளாக இருந்து வருகின்ற புதிய தாராளமயக் கொள்கைகளே உண்மையில் நம்மைச் சுற்றி நாம் காண்கின்ற தற்போதைய விவசாய நெருக்கடிகளுக்குக் காரணமாக இருக்கின்றன. புதிய தாராளமயக் கொள்கைகள் தொடங்கிய ஓராண்டிற்குள்ளாக *1992*ஆம் ஆண்டில் ஹரியானா மாநிலம் ஹிசாரில் நடைபெற்ற தேசிய மாநாட்டில்

தாராளமயக் கொள்கைகளின் ஆபத்து குறித்து கணித்து அகில இந்திய விவசாயிகள் சங்கம் எச்சரிக்கை செய்திருந்தது.

## பொருளாதாரச் சீர்திருத்தம் ஏன் தோல்வியடைந்தது

**பொருளாதார வளர்ச்சி இருந்தபோதிலும், இந்திய விவசாயம் அதிவேக வளர்ச்சியை அடையவில்லை அல்லது சிறு விவசாயிகள் விடுதலை பெறவில்லை அல்லது விரிவான கிராமப்புற வளர்ச்சி இல்லை. ஏன்?**

வேளாண்துறையில் பொருளாதாரச் சீர்திருத்தங்கள் தோல்வியையே கண்டிருக்கின்றன. ஏனெனில் வேளாண்துறையின் தேவைகளை அவர்கள் தவறாகவே புரிந்து கொண்டிருந்தனர். வேளாண் சீர்திருத்தங்கள், பொது முதலீடு, அரசின் ஆதரவு போன்றவை இந்த துறைக்குத் தேவைப்பட்டன. ஆனால் கொள்கை வகுப்பாளர்களோ தங்கள் கைகளில் எந்தவொரு ஆதாரமுமில்லாமல் விவசாயத்தில் வெளி மற்றும் உள்நாட்டு சந்தைகளைத் திறந்து விட்டால் அந்தத் துறை தானாகவே வளரத் தொடங்கும் என்று கருதினர். மேற்கத்திய உலகைப் பாருங்கள். தங்கள் சந்தைகளை அவர்கள் இந்தியாவில் நாம் செய்ததைப் போல திறந்து விட்டிருந்தால் அவர்களுடைய விவசாயம் ஓராண்டிற்குக்கூட பிழைத்திராது. அதனால்தான் உலக வர்த்தக அமைப்புடனான பேச்சுவார்த்தைகளில் மேற்கத்திய விவசாயத்தில் உள்ள பாதுகாப்புக் கொள்கைகளை நீக்குவதற்கு அவர்கள் மறுத்து விட்டனர். தங்களுடைய சொந்த விவசாயத்தைப் பாதுகாத்துக் கொள்ளும் அதே வேளையில் முரண்பாடாக அந்த நாடுகளே சந்தையைத் திறந்து விடுமாறு இந்தியா போன்ற நாடுகளிடம் அறிவுறுத்துகின்றன. அவர்களின் இந்த இரட்டை நிலைக்கு, முற்றிலும் பகுத்தறிவற்ற கோரிக்கைக்கு நமது அரசும் அடிபணிந்து செல்கிறது.

## குறைவான உற்பத்தித்திறன்

**சீர்திருத்தங்களின் பின்னணியில் விவசாயத்தில் இருந்து வரும் குறைவான உற்பத்தித்திறனும், அதிகரித்து வருகின்ற தொழிலாளர்களை உள்வாங்க இயலாமையும் கண்கூடாகத் தெரிகின்றன. விவசாயிகள், குறிப்பாக சிறு விவசாயிகள் இன்னும் ஓரங்கட்டப்பட்டே இருக்கின்றனர். அதற்கான காரணங்களைக் கூற முடியுமா?**

விவசாயத்தில் குறைவான உற்பத்தித்திறன் என்பது தீவிரமான பிரச்சனையாக இருந்து வருகிறது. இந்திய வேளாண் பண்ணைகளில் மகசூல் குறைவு மிகவும் அதிகமாக உள்ளது. உற்பத்தித்திறன் வளர்ச்சியில் இருக்கின்ற மோசமான நிலைக்கு பொது விவசாய ஆய்வுகளில் இருக்கின்ற பலவீனமே காரணம் என்று அகில இந்திய விவசாயிகள் சங்கம் தொடர்ந்து கூறி வருகிறது. பொது விவசாய ஆய்வுகளில் முதலீடு செய்வதற்கு நமது விவசாய மொத்த உள்நாட்டு உற்பத்தியில் குறைந்தது இரண்டு சதவிகிதம் தேவைப்படும். அதைத்தான் சீனா செய்து வருகிறது.

பொது விவசாய ஆய்வுகளை வலுப்படுத்தி, அதிக மகசூல் தரும் விதைகளை மான்சாண்டோவின் விலையில் சுமார் இருபத்தைந்து சதவிகிதம் என்ற அளவிலே உற்பத்தி செய்ததன் மூலம் தங்களுடைய நாட்டிலிருந்து மான்சாண்டோவை சீனா வெளியேற்றியது. அவர்களுடைய ஆய்வு அமைப்பின் வலிமை அதிக பொது முதலீட்டில் இருந்தே கிடைத்துள்ளது. ஆனால் நாம் அதில் தோல்வியடைந்திருக்கிறோம். இங்கே மான்சாண்டோ மற்றும் விவசாயத்தில் உள்ள அதுபோன்ற பெருநிறுவனங்களின் அடிமைகளாகவே நாம் இருந்து வருகிறோம். அதேபோல அரசு சாரா நிறுவனங்கள், தனியார் உள்ளீட்டு விநியோகஸ்தர்களால் நமது விரிவாக்க அமைப்பு முற்றிலுமாக கையகப்படுத்தப்பட்டுள்ளது. பொது ஆய்வு பலவீனமடைந்ததால், பொது விரிவாக்கமும் சரிவைக் கண்டுள்ளது.

## தடையற்ற வர்த்தகத்தின் ஆபத்துகள்

**தடையற்ற வர்த்தகம், பொதுச் செலவினங்களைக் குறைப்பது போன்ற செயல்பாடுகள் இந்தியாவின் உணவுப் பாதுகாப்பிற்கு ஆபத்தானவை என்று பொருளாதார வல்லுநர்கள் மீண்டும் மீண்டும் கூறி வருகிறார்கள்.**

தடையற்ற வர்த்தகம் ஓர் அமைப்பாக இன்றைக்கு உலகம் முழுவதும் மதிப்பிழந்து நிற்கிறது. வளர்ந்த நாடுகள் கூட நம்பகமான நிறுவனம் என்று உலக வர்த்தக அமைப்பை நினைக்கவில்லை. அதனால்தான் அதிக அளவிலான பிராந்திய, இருதரப்பு தடையற்ற வர்த்தக ஒப்பந்தங்களுக்கு அந்த நாடுகள் அழுத்தம் கொடுத்து வருகின்றன. உலக வர்த்தக அமைப்பு செயல்படக்கூடியதாகவும் பயனுள்ளதாகவும் இருக்குமென்றால், இத்தகைய புதிய ஒப்பந்தங்கள் ஏன் தேவைப்படுகின்றன? ஆப்பிரிக்கா, லத்தீன் அமெரிக்கா, ஆசியா முழுவதும் தடையற்ற வர்த்தக ஒப்பந்தங்கள் வேளாண் சமூகங்களில் அழிவையே ஏற்படுத்தியுள்ளன. அந்த நாடுகளின் மீது மலிவான இறக்குமதிகள் கொட்டப்பட்டுள்ளன. அதன் விளைவாக விலை வீழ்ச்சியடைந்து விவசாய நெருக்கடி மேலும் தீவிரமடைந்துள்ளது.

உணவு தானிய உற்பத்தியில் மோசமான அடித்தளத்துடன் உள்ள நாடுகளில் தடையற்ற வர்த்தகம் உணவுப் பாதுகாப்பையும் பாதிப்பதாக இருக்கின்றது. பணப்பயிர்களை ஏற்றுமதி செய்து அன்னியச் செலாவணியைப் பெற்று அந்த நாடுகள் உணவு தானியங்களை வாங்குகின்றன. பணப்பயிர்களின் விலை குறையும் போது ஏற்றுமதி வருவாய் குறைவதால் முன்பு இருந்த அதே அளவுகளில் உணவு தானியங்களை இறக்குமதி செய்வது அந்த நாடுகளைப் பொறுத்தவரை கடினமாகிறது. அவர்களுடைய உணவுப் பாதுகாப்பை அது மிகவும் மோசமாகப் பாதிக்கின்றது.

அத்துடன் சிறு,குறு விவசாயிகள் நியாயமான லாபத்துடன் உற்பத்தி செய்யக் கூடிய திறனை பொதுச் செலவினங்கள் மீதான வெட்டுக்கள் கடுமையாகப் பாதிக்கின்றன. மானியக் குறைப்பு, பெருநிறுவனங்களின் இலாபவெறி ஆகியவற்றால் இடுபொருள் விலைகள் அதிகரித்துக் கொண்டே இருக்கின்றன. பன்னாட்டு நிறுவனங்களை நம்பியே விவசாயிகள் வாழ வேண்டியதாகிறது. இவையனைத்தும் சேர்ந்து சிறு, குறு விவசாயிகள் மீதான கடுமையான அழுத்தத்திற்கு வழிவகுத்துக் கொடுக்கின்றன.

**சீர்திருத்தங்களுக்குப் பிறகு அவற்றில் குறிப்பிடப்பட்டவாறு வேளாண்துறை வளர்ச்சி அடைந்திருந்தால் இந்தியாவின் வளர்ச்சி விகிதம் அதிகமாக இருந்திருக்கும் என்பதை ஒப்புக் கொள்கிறீர்களா?**

1980களில் இந்தியாவிலிருந்த விவசாய வளர்ச்சி விகிதம், கடந்த முப்பது ஆண்டுகால புதிய தாராளமயக் கொள்கைகளால் ஏற்பட்ட வளர்ச்சி விகிதத்தை விட அதிகமாகவே

இருந்தது என்பது மிகவும் எளிமையான உண்மை. இந்த ஒன்றே சீர்திருத்தங்கள் விவசாயத்தில் எந்த வளர்ச்சியையும் கொண்டு வரத் தவறி விட்டன என்று வாதிடுவதற்குப் போதுமானதாக உள்ளது.

ஆனால் இங்கே மற்றொரு விஷயமும் இருக்கிறது. விவசாய வருமானத்தை 2015 மற்றும் 2022க்கு இடையில் இரட்டிப்பாக்கப் போவதாக நரேந்திர மோடி அரசாங்கம் கூறியது. அது தற்போதைய பாஜக ஆட்சியின் மிகப்பெரிய தோல்வியாக இருக்கிறது. இந்த காலகட்டத்தில் விவசாயிகளுக்கு கிடைத்த வரவுகள் உண்மையில் குறைந்தே இருக்கின்றன. பேரழிவை ஏற்படுத்திய பணமதிப்பு நீக்கம், தவறாகக் கொண்டு வரப்பட்ட சரக்கு மற்றும் சேவை வரி (ஜிஎஸ்டி) அமைப்பு, கோவிட்–19 நெருக்கடியை மனிதாபிமானமற்ற கடுமையான பொதுமுடக்கத்தின் மூலம் எதிர்கொண்டது... என்று பாஜக அரசின் செயல்பாடுகள் விவசாயிகளை மிகமோசமாகக் காயப்படுத்தியுள்ளன. விவசாயிகள் மிகுந்த கோபத்துடன் இருக்கிறார்கள். நிச்சயமாக சீர்திருத்தங்கள் தங்கள் நிலைமையை மிகவும் மோசமாக்கியிருப்பதாகவே அவர்கள் உணர்கின்றார்கள்.

## விவசாயிகள் இயக்கத்தின் பரிணாமம்

**கடந்த முப்பதாண்டுகளாக விவசாயிகள் மற்றும் விவசாயத் தொழிலாளர்களின் போராட்டங்களை முன்னெடுத்துச் சென்றிருக்கிறீர்கள். உங்களுடைய பிரச்சாரங்களின் மையமாக இருப்பது என்ன? விவசாயிகளின் அணிதிரட்டல் எவ்வாறு பரிணமித்துள்ளது என்று பார்க்கிறீர்கள்?**

கடந்த இருபத்தைந்து ஆண்டுகளில் (1995 முதல்) நான்கு லட்சத்துக்கும் அதிகமான விவசாயிகள் தற்கொலைக்கு வழிவகுத்த, கடந்த முப்பது ஆண்டு கால புதிய தாராளமயக் கொள்கைகளால் ஏற்பட்டுள்ள மோசமான விவசாய நெருக்கடியைக் கருத்தில் கொண்டு, இந்த காலகட்டத்தில் நடைபெற்ற விவசாயிகள் போராட்டங்களின் மையப் புள்ளிகளைப் பட்டியலிடுகிறேன்.

மூன்று வேளாண் சட்டங்களை ரத்து செய்வது என்ற அடிப்படையான பிரச்சனையுடன், விரிவான உற்பத்தி செலவை விட ஒன்றரை மடங்கு (C2+ஐம்பது சதவிகிதம், சுவாமிநாதன் குழுவின் பரிந்துரைப்படி) குறைந்தபட்ச ஆதார விலையை (MSP) உறுதி செய்கின்ற மத்திய



சட்டம் ஒட்டுமொத்த வேளாண்துறையையும் தனியார்மயமாக்குகின்ற, அனைவருக்கும் பெருமளவில் மின் கட்டணத்தை அதிகரிக்க வழிவகுக்கின்ற மின்சார திருத்த மசோதாவைத் திரும்பப் பெறுதல், வானளாவி உயர்ந்திருக்கும் டீசல், பெட்ரோல், எரிவாயு விலையை பாதியாகக் குறைத்தல் விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்களின் கடனை முழுமையாகத் தள்ளுபடி செய்தல் (தற்போதைய மத்திய அரசு கடந்த ஏழு ஆண்டுகளில் பெருநிறுவனங்களுக்கு பல லட்சம் கோடி ரூபாய் கடனை தள்ளுபடி செய்துள்ளது) பிரதான மந்திரி ஃபசல் பீமா யோஜனா (PMFBY) திட்டத்தின் கீழ் தற்போது உள்ளதைப் போல, காப்பீட்டு நிறுவனங்களுக்கு இல்லாமல் துயரத்தில் ஆழ்ந்துள்ள விவசாயிகளுக்கு உதவ பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தை முழுமையாக மறுசீரமைப்பு செய்தல் சிறு, குறு விவசாயிகள் அனைவருக்கும் மலிவான, போதுமான கடன் வழங்கப்படுதல் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலையுறுதிச் சட்டத்தின் (MGNREGA) கீழ் விவசாயத் தொழிலாளர்களுக்கான வேலை நாட்களையும் ஊதியத்தையும் இரட்டிப்பாக்குதல் பழங்குடியின மக்களுக்கான வன உரிமைச் சட்டத்தை முழுமையாக அமல்படுத்துதல் விவசாயிகளிடம் இருந்து வலுக்கட்டாயமாக நிலம் கையகப்படுத்துவதை நிறுத்துதல் போன்ற மையப் புள்ளிகளுடன் உண்மையான நிலச் சீர்திருத்தங்களை நோக்கிய இயக்கமாகவே விவசாயிகளின் போராட்டங்கள் இருந்துள்ளன. திருத்தப்பட்ட நான்கு தொழிலாளர் சட்டங்களை ரத்து செய்ய வேண்டும் என்ற தொழிலாள வர்க்கத்திற்கான கோரிக்கையும், தனியார்மயமாக்கல் மூலம் பாஜக ஆட்சி நாட்டை விற்பதற்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட வேண்டும் என்ற மக்கள் கோரிக்கையும் விவசாயிகளின் கோரிக்கைகளுடன் சேர்க்கப்பட்டுள்ளன.

கடந்த முப்பதாண்டு கால புதிய தாராளமயக் கொள்கைகள் மீதான விவசாயிகள் இயக்கங்களின் பரிணாமம் மேலே குறிப்பிட்டுள்ள பிரச்சனைகள் அதிகரித்து வரும் போக்கைத் தெளிவாகக் காட்டுகிறது. கடந்த ஏழு ஆண்டுகளில் பெருநிறுவனச் சார்பு கொள்கைகளைச் செயல்படுத்துவதில் எல்லை மீறி இருந்து வந்துள்ள மோடி அரசாங்கத்தின் மீதான விவசாயிகள் இயக்கத்தின் தீவிரம் தவிர்க்க முடியாத வகையிலேயே

இருந்துள்ளது. அரசின் கொள்கைகள் மீது விவசாயிகள் காட்டிய வலுவான எதிர்ப்பு 2017இல் நடைபெற்ற பதினோரு நாள் விவசாயிகள் வேலைநிறுத்தம், 2018இல் அகில இந்திய விவசாயிகள் சங்கத்தின் தலைமையில் நடைபெற்ற விவசாயிகளின் மாபெரும் பேரணி உட்பட ராஜஸ்தான், மகாராஷ்டிராவில் நடைபெற்ற பெரும் போராட்டங்களில் வெளிப்பட்டது. பின்னர் 2018இல் தேசிய தலைநகரில் அனைத்திந்திய கிசான் சங்கர்ஷ் ஒருங்கிணைப்புக் குழு (AIKSCC) நடத்திய பேரணி, இந்திய தொழிற்சங்கங்களின் மையம்– அகில இந்திய விவசாயிகள் சங்கம்– அனைத்து இந்திய விவசாயத் தொழிலாளர் சங்கம் இணைந்து நடத்திய பேரணி என்று இரண்டு பெரிய பேரணிகள் நடந்துள்ளன.

முந்தைய போராட்டங்கள் அனைத்தின் உச்சகட்டமாக 2020 நவம்பர் 26 அன்று தில்லியின் எல்லைகளிலும், நாடு முழுவதிலும் ஐக்கிய விவசாயிகள் முன்னணியின் தலைமையில் துவங்கிய வரலாற்றுச் சிறப்புமிக்க விவசாயிகளின் போராட்டம் அமைந்துள்ளது. ஒட்டகத்தின் முதுகின் மீது வைக்கப்பட்ட கடைசி வைக்கோல் என்ற பழமொழிக்கேற்ப மத்திய அரசு இயற்றியுள்ள மூன்று கொடூரமான வேளாண் சட்டங்கள் இருக்கின்றன. இந்த விவசாயிகள் போராட்டம் மதம், ஜாதி, பிரதேசம், மாநிலம், மொழி ஆகியவற்றைக் கடந்ததாக உள்ளது. அரசின் அடக்குமுறைகளையும், தன் மீது வைக்கப்பட்ட அவதூறுகளையும் துணிச்சலுடன் அது எதிர்கொண்டுள்ளது. மேலும் பெருநிறுவன வகுப்புவாதம், புதிய தாராளமயப் பாதை மீது துல்லியமாக தனது இலக்கைக் கொண்டுள்ளது. வெற்றி கிடைக்கும் வரை போராட்டத்தை விரிவுபடுத்தி, தீவிரப்படுத்துவது என்று விவசாயிகள் முடிவு செய்துள்ளனர்.

## ஒப்பந்த விவசாயம்

**சர்ச்சைக்குரிய பிரச்சனையாக உள்ள ஒப்பந்த விவசாயம் நம்மைச் சுற்றி இருந்து வருகிறது. மாறுபட்ட விளைவுகளைக் கொண்டிருந்த போதிலும் அது இன்னும் ஊக்குவிக்கப்பட்டே வருகிறது. ஒப்பந்த விவசாயத்தின் நன்மைகள், தீமைகளைப் பற்றி விளக்க முடியுமா?**

சில காலமாகவே ஒப்பந்த விவசாயம் நம் நாட்டில் செய்து வரப்படுகிறது. விவசாயிகளுக்கு ஆதரவான சிறப்பான கட்டுப்பாடுகளே ஒப்பந்த விவசாயத்தைப் பொறுத்தவரை நமக்குத் தேவைப்படுகின்றன. விவசாயிகளுக்குத் தருவதாக ஒப்புக்கொண்ட விலையை வழங்கிடாமல் பெருநிறுவனங்கள் ஏமாற்றுவதைத் தடுப்பதை உறுதி செய்ய வேண்டும். சுற்றுச்சூழலுக்கு கேடு விளைவிக்காத சாகுபடி முறைகளை விவசாயிகள் மீது அந்த நிறுவனங்கள் வலியுறுத்தாமல் இருப்பதை உறுதி செய்ய வேண்டும். விவசாயிகளுக்குச் சாதகமாக இருக்கின்ற குறை தீர்க்கும் ஒழுங்குமுறை நடவடிக்கைகள் தேவைப்படுகின்றன.

ஆனால் மிகவும் மோசமாக வடிவமைக்கப்பட்ட ஒழுங்குமுறையையே நாம் வேளாண் சட்டங்களில் கொண்டிருக்கிறோம். ஒப்பந்த விவசாயத்தில் ஈடுபடும் நிறுவனங்களுக்கு மட்டுமே உதவும் வகையில் அது வடிவமைக்கப்பட்டுள்ளது. அந்த நிறுவனங்களிடம் தங்கள் நிலத்தை விவசாயிகள் இழக்க நேரிடும் என்ற அச்சம் தொடர்ந்து இருந்து வருகிறது. ஒப்பந்த விவசாயத்தில் கடுமையான கட்டுப்பாடுகள் தேவைப்படுகின்றன. அதற்கான விதிமுறைகளை மாநிலம் சார்ந்த சூழல்களைக் கருத்தில் கொண்டு, மாநில அரசுகள் சிறந்த முறையில் உருவாக்கி பின்பற்றலாம்.

**வேளாண் சட்டங்களுக்கு எதிரான விவசாயிகள் போராட்டங்களில் அகில இந்திய விவசாயிகள் சங்கம் தீவிரமாகப் பங்கேற்று வருகிறது. வேளாண் சட்டங்கள் பற்றி பேசலாமா?**

பாஜக அரசின் வேளாண் சட்டங்கள் இந்திய விவசாயிகளின் வாழ்வாதாரத்தின் மீது மிகப் பெரிய தாக்குதலாக அமைந்துள்ளன. விவசாய உற்பத்தி சந்தைக் குழு, மண்டிகள், அத்தியாவசிய பொருட்கள் சட்டம் போன்றவை *1960*களில் இருந்து விவசாயிகள் மற்றும் நுகர்வோருக்காக இருந்து வருகின்ற பாதுகாப்பு அரண்களாகும். விவசாய உற்பத்தி சந்தைக் குழு, மண்டி அமைப்புகளில் சில குறைபாடுகள் இருந்த போதிலும், விவசாயிகள் சந்தைகளை சிறந்த முறையில் அணுகவும், நிலையான விலையைப் பெறவும் அவை உதவி வந்திருக்கின்றன. அந்த அமைப்புகளில் உள்ள குறைகள் களையப்பட வேண்டும் என்பதற்கு மாறாக குளியலறைத் தொட்டியிலிருந்து குழந்தையை வீசியெறிந்ததைப் போன்று இந்த அரசாங்கம் புதிய வேளாண் சட்டங்களைக் கொண்டு வந்துள்ளது. அவர்கள் விவசாய உற்பத்தி சந்தைக் குழு அமைப்பை விரும்பவில்லை அந்த அமைப்பை அகற்றி விட்டு, அதானி மற்றும் அம்பானி குழுமங்கள் போன்ற தனியார் நிறுவனங்களிடம் ஒட்டுமொத்த கட்டுப்பாட்டைக் கொடுத்திடவே விரும்புகிறார்கள். மண்டி அமைப்பின் அழிவு விவசாயிகளை பெருநிறுவனங்களின் கட்டுப்பாட்டுக்குள் தள்ளி விடும். பஞ்சாப், ஹரியானா, மேற்கு உத்தரப்பிரதேசம் போன்ற மாநிலங்களில் அது விவசாயிகளின் மரணத்தையே விளைவிக்கும். பீகாரில் 2006இல் மண்டி அமைப்பை அகற்றியது அங்குள்ள விவசாயிகளைக் மிகக் கடுமையாகப் பாதித்தது.

அதேபோன்று, அத்தியாவசியப் பொருட்கள் சட்டத் திருத்தமானது சில்லறை வணிகத் துறையையும், தளவாடத் துறையையும் பெருநிறுவனத்தின் ஆதிக்கத்திற்கு திறந்து விடுவதாகவே இருக்கும். அது சந்தையில் உணவுப் பொருட்களின் விலையை அதிகரிக்கும் என்பதால் நுகர்வோருக்கும் பாதிப்பையே ஏற்படுத்தும்.

சுருக்கமாகச் சொல்வதென்றால் பாஜக ஆட்சியின் இந்த மூன்று வேளாண் சட்டங்கள் குறைந்தபட்ச ஆதார விலை, அரசாங்க உணவு தானியங்கள் கொள்முதல், இந்தியாவில் *81* கோடிக்கும் அதிகமான மக்களால் பயன்படுத்தப்படும் பொது விநியோக முறை ஆகியவற்றை ஒட்டுமொத்தமாக அகற்றுவதையே நோக்கமாகக் கொண்டுள்ளன. அதனால்தான் இந்த வேளாண் சட்டங்கள் விவசாயிகளுக்கு எதிரானவையாக மட்டும் இல்லாமல், அடிப்படையில் மக்களுக்கு எதிரானவையாகவும் இருக்கின்றன என்று நாங்கள் தகுந்த காரணங்களுடன் கூறி வருகிறோம்.

மேலும் இந்த வேளாண் சட்டங்கள் அரசியலமைப்பிற்கு முரணானவையாகவும் இருக்கின்றன என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். விவசாயம் மாநில அரசாங்கங்களின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதியாகும். அந்த வகையிலேயே நமது அரசியலமைப்பு செயல்பாடுகளை வெளிப்படையாக வரையறுத்துள்ளது. ஆனால் மத்திய அரசு, மற்ற பல விஷயங்களைப் போலவே, அரசியலமைப்புச் சட்டத்தை

**தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க...**

# உலக உணவு வகைகளில் பழங்குடியின மக்களின் பங்களிப்பு

கிறிஸ்தோப்பர் கொலம்பஸ் என்பவர்தான் அமெரிக்க கண்டத்தை முதன்முதலில் கண்டு பிடித்தவர் என முதலாளித்துவ வரலாற்ராசிரியர்கள் கூறுவதுண்டு. அது தவறு என்பதை வரலாற்று ஆய்வுகள் தெளிவாக நிரூபித்துள்ளன.

கொலம்பஸ் அமெரிக்காவைச் சென்றடைவதற்கு முன்பே அந்தக் கண்டத்தில் பூர்வகுடியின மக்கள் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாக வாழ்ந்து வந்துள்ளனர். அது மட்டுமல்லாது அவர்கள் பல உணவுப் பயிர்களையும் பயிரிட்டு வந்துள்ளார்கள். இன்று நமது புழக்கத்தில் உள்ள சில உணவு வகைகள் அமெரிக்கக் கண்டத்தில் இருந்தே உலகின் மற்றைய பகுதிகளுக்கு பரவின.

இன்றைய உலகில் பயன்படுத்தப்படும் விவசாய விளை பொருட்களில் ஐந்தில் மூன்று பகுதியின் பிறப்பிடம் அமெரிக்கக் கண்டமே. கொலம்பிய நாட்டின் பங்களிப்பு இல்லாமல் இத்தாலிய உணவு வகைகளுக்கான தக்காளி கிடைத்திருக்காது. அதுபோல இந்திய சமையலில் அதிகம் பயன்படுத்தப்படும் மிளகாய் மற்றும் உலகில் பரந்த அளவில் பயன்படுத்தப்படும் உருளைக்கிழங்கு, பூசனி, அவரை வகைகள், சோளம் என்பனவும் கிடைத்திருக்க வாய்ப்பில்லை. சோளமே உலகில் அதிகம் – கிட்டத்தட்ட 500 மில்லியன் ஏக்கரில் – பயிரிடப்படும் தானிய வகையாக இருக்கின்றது.

“உலகில் இன்று பயன்படுத்தப்பட்டு வரும் பெரும்பான்மையான உணவுப் பொருட்கள் பழங்குடியின மக்களால் உலக விவசாயத்துக்கு வழங்கப்பட்ட பங்களிப்பாகும்” என பேர்டு பல்கலைக்கழகப் (Purdue University) பேராசிரியர் ஜூல்ஸ் ஜனிக் (Jules Janick) கூறுகிறார். ஆனால் பிற்காலத்தில் அமெரிக்கக் கண்டத்தில் குடியேறிய ஐரோப்பிய குடியேற்றவாசிகளால் பழங்குடியின மக்களின் உணவுப் பழக்கங்களில் பல தாக்கங்கள் ஏற்பட்டுள்ளன.

# வண்டுகளிடம் கற்ற சிகிச்சை முறை

மூளையில் இரத்தக் கசிவு போன்றவை ஏற்பட்டால் , அதை அடைத்துப் பிற பகுதிகளில் பாதிக்கப்படாமல் செய்வது அவசியம். இதற்கு, மூளையின் நெளிவு சுளிவான பகுதிகளுக்குள் துல்லியமாகக் குழாய்களைச் செலுத்தி, அக்குழாய்களின் வழியே துளையை அடைக்கும் பிளாட்டினம் கம்பிகளை அனுப்பிப் பொருத்துவர்.ஆனால், மூளையின் சில சிக்கலான பகுதிகளில் இந்த சிகிச்சை முறை சாத்தியமாவதில்லை.

இந்தக் குறையைப் போக்க, இயற்கை படைத்த வண்டுகளின் உதவியை நாடினர், அமெரிக்காவிலுள்ள கலிபோர்னியா பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள்.

அதன்படி , வண்டுகளின் கால் அமைப்பு இயங்கும் விதத்தைக் கவனித்து, அதுபோலவே ரோபோ கம்பிகளை வடிவமைத்தனர் . அதை மூளையின் நெளிவுகளுக்குள் விரும்பியபடி செலுத்தி, சிக்கலான இடத்திலும் கூட சிகிச்சை அளிக்கமுடியும் என்று உறுதியளித்தனர்.

மேலும், பன்றியின் மூளையில் இந்த கண்டுபிடிப்பைச் சோதித்தபோது, பல சிக்கலான சிகிச்சை முறைகளையும் மருத்துவர்கள் வெற்றிகரமாகச் செய்ததாகத் தெரிவித்தனர். இந்த சிகிச்சை முறை நடைமுறைக்கு வந்தால் மூளையில் ரத்தக்கசிவு ஏற்பட்டோர் மற்றும் பக்கவாதம் ஏற்பட்டோர் பெரிதும் பயனடைவர் என்று ஆராய்ச்சியாளர்கள் அறிவித்துள்ளனர்.

பூச்சி இனத்தைச் சேர்ந்தவை வண்டுகள். பூச்சி இனங்களில் 40 சதவிகிதம் வண்டுகள்தான். 3,50,000 வகை வண்டு இனங்கள் உள்ளன. இன்னும் கண்டறியப்படாத வண்டு இனங்கள் ஏராளமாக இருக்கின்றன. பூமியில் தோன்றிய பழமையான உயிரினங்களில் வண்டுகளும் ஒன்று.

# தோழர் சண்முகம் கதிரவேலு மறைவுக்கு எமது அஞ்சலி!



கனடாவில் வாழ்ந்து வந்த தோழர் சண்முகம் கதிரவேலு தமது 83ஆவது வயதில் 21.11.2021இல் காலமாகிவிட்டார்.

தோழர் கதிரவேலு அரசியலைப் பொறுத்தவரையில் தனது இளமைக்காலம் முதல் இறுதிவரை இலங்கை கம்யூனிஸ்ட் இயக்கத்தில் தன்னை இணைத்துக் கொண்டு செயற்பட்டவர். தொழிலைப் பொறுத்தவரை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் ஒரு பொறியியலாளராகப் பணிபுரிந்தவர்.

இலங்கையில் வாழ்ந்த காலத்தில் தொழிற்சங்க இயக்கத்திலும் அதிக ஈடுபாடு கொண்டிருந்தவர். கனடாவுக்கு புலம் பெயர்ந்த பின்னர் முதியோர் சங்கங்களில் முக்கிய பங்கு வகித்துப் பணியாற்றியதுடன், தன்னலம் கருதாது, உதவி கோரி வந்தவர்கள் அனைவருக்கும் தன்னால் முடிந்த உதவிகளைச் செய்து உதவியவர். குறிப்பாக ஆங்கிலம் தெரியாத பலருக்கு அவரது உதவி அருங்கொடையாக அமைந்தது. கனடாவில் நடந்த அனைத்து முற்போக்கு நிகழ்ச்சிகளிலும் தவறாது பங்குபற்றி வந்தவர்.

‘வானவில்’ பத்திரிகை மீதும் அவருக்கு ஈடுபாடு இருந்தது. பிரதி மாதமும் பத்திரிகை வெளிவந்தவுடன் சில பிரதிகளைப் பெற்று தனது நண்பர்களுக்கு விநியோகித்து வந்தவர்.

அத்தகைய ஒரு மக்கள் சேவையாளரின் இழப்பு ஈடு செய்ய முடியாதது.

தோழர் கதிரவேலு அவர்களை இழந்து நிற்கும் அன்னாரது குடும்பத்துக்கு ‘**வானவில்**’ சார்பாக எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், எமது அஞ்சலியையும் செலுத்துகின்றோம்.

**முன்பக்கத் தொடர்ச்சி....**

சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்களை விட சற்று வேறுபாடான ஒரு திட்டம் எனச் சுட்டிக் காட்டப்படுகிறது.

1977இல் ஜே.ஆர்.ஜெயவர்த்தன தலைமையில் ஆட்சிக்கு வந்த ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம், அதற்கு முன்பு சிறீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான அரசுகளால் பின்பற்றப்பட்டு வந்த பொருளாதாரக் கொள்கைகளை மாற்றியமைத்து 'திறந்த பொருளாதாரக் கொள்கை' என்ற புதிய திட்டமொன்றை உலக வங்கியின் ஆலோசனைக்கமைய அறிமுகப்படுத்தி, நாட்டை அந்நியக் கம்பனிகளுக்குத் திறந்துவிட்டது. அதன் மூலம் நாட்டை அந்நியக் கம்பனிகள் தங்குதடையின்றி சுரண்டுவதற்கு வழி சமைத்ததுடன், தொழிலாளர் உரிமைகளும் காற்றில் பறக்க விடப்பட்டன. அதன் மூலம் தேசிய பொருளாதாரத்துக்கு சவக்குழி தோண்டப்பட்டது.

ஜே.ஆர். அரசு கொண்டு வந்த திறந்த பொருளாதாரத் திட்டத்தை எதிர்க்கட்சியில் இருந்த சிறீலங்கா சுதந்திரக் கட்சியும் அதன் தோழமைக் கட்சிகளான இடதுசாரிக் கட்சிகளும் அன்று தீவிரமாகவும் கடுமையாகவும் எதிர்த்திருந்தன.

ஆனால் பின்னர் சந்திரிக குமாரதுங்க மற்றும் மகிந்த ராஜபக்ஸ ஆகியோர் தலைமைதாங்கிய சிறீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான அரசுகள் (அவற்றில் இடதுசாரிக் கட்சிகளும் அங்கம் வகித்த போதிலும்) ஜே.ஆரின் நாசகாரத் திட்டமான திறந்த பொருளாதாரத் திட்டத்தை மாற்றியமைக்க முயற்சிக்காமல் அதன் அடியொற்றியே ஆட்சியை நடத்தி வந்துள்ளனர்.

ஆனால், ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ஸ தலைமையிலான தற்போதைய அரசு அந்த நிலைமையை மாற்றியமைப்பதற்கான முயற்சியை தற்போது சமர்ப்பிக்கப்பட்டுள்ள வரவு – செலவுத் திட்டம் மூலம் ஆரம்பித்து வைத்துள்ளது போலத் தோன்றுகிறது. அதாவது 'கடன் வாங்கிக் கல்யாணம்' என்பது போல அந்நிய நாடுகளிடமும், சர்வதேச நிதி நிறுவனங்களிடமும் அறா வட்டிக்கு பணத்தைக் கடன் வாங்கி அதன் மூலம் மானிய விலையில் மக்களுக்கு பொருட்களை வழங்கி நாட்டை நிரந்தரக் கடனாளியாக வைத்திருப்பதற்குப் பதிலாக, தேசிய பொருளாதாரத்தைச் சரியான வழியில் சீரமைப்பதன் ஊடாக, தன்னிறைவுப் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் முயற்சி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அதன் காரணமாகவே இம்முறை வரவு – செலவுத் திட்டத்தில் விவசாயத்துறைக்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அரசாஙகத்துக்கு இத்தகைய ஒரு யோசனை வந்ததிற்கு பல காரணங்கள் கூறப்படுகின்றன. அதாவது, உலக ரீதியாக கொவிட் நோய்த் தாக்கத்தால் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியால் பொருட்களின் விலைகள் அதிகரித்துள்ளதால் அவற்றை நியாய விலையில் வாங்குவதில் எழுந்துள்ள சிக்கல், இலங்கையிலும் கொவிட் தாக்கத்தால் பிரதான அந்நியச் செலாவணியை ஈட்டித் தந்த சுற்றுலாத்துறை வீழ்ச்சியடைந்து விட்டதால் ஏற்பட்டுள்ள அந்நியச் செலாவணி (பிரதானமாக டொலர்) பற்றாக்குறை போன்ற காரணங்களே அரசின் தற்போதைய சுய சார்பு நடவடிக்கைகளுக்கு வித்திட்டுள்ளன எனக் கூறப்படுகிறது.

காரணம் எதுவாக இருப்பினும், அரசு இப்பொழுதாவது விழித்துக் கொண்டு செயற்பட முன் வந்திருப்பது வரவேற்கப்பட வேண்டிய நடவடிக்கையே.

அதேநேரத்தில், பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏறபட்டிருப்பதும், அதன் விலைகள் அதிகரித்திருப்பதும், சாதாரண மக்கள் அத்தியாவசியப் பொருட்களை வாங்கத் திராணியற்றுத் திணறுவதையும் காண முடிகிறது. எனவே, 'வடலி வளர்த்து கள் குடிப்பது' என்ற ரீதியில் அரசாங்கத்தின் தற்போதைய தன்னிறைவுப் பொருளாதாரக் கொள்கைகள் வெற்றி பெற்று பொருட்கள் தாராளமாகவும் மலிவாகவும் மக்களுக்குக் கிடைக்கும் வரை அவர்கள் தமது இடுப்புப் பட்டியை இறுக்கி வைத்திருக்க வேண்டும் என்ற அடிப்படையில் அரசு செயற்படுமாக இருந்தால் அதுவும் அரசின் தவறான முடிவாகவே இருக்கும். ஏனெனில், அந்த நிலைமை மக்களின் வாழ்க்கையைக் கடுமையாகப் பாதிப்பதுடன், அரசுக்கெதிராக அவர்களது கோபாவேசத்தையும் நிச்சயம் தூண்டி விடும்.

எனவே, அரசு ஒரு வழிப் பாதையில் மட்டும் பயணிக்க எத்தனிக்காமல் மக்களின் அன்றாட உடனடித் தேவைகளையும் கவனத்தில் கொண்டு செயல்படுவது அவசியம். அதாவது, நாட்டைத் தன்னிறைவுப் பாதையில் கொண்டு செல்வதற்கான நீண்டகால திட்டங்களைத் தொடருகின்ற அதே நேரத்தில், மக்களின் உடனடி அத்தியாவசியத் தேவைகளைப் பூர்த்தி செய்கின்ற வகையில் சில நிவாரணங்களையும் வழங்க வேண்டும். அதுதான் சரியான பாதையாக இருக்கும்.

இதை சீனத் தலைவர் மாஓ தனது நாட்டின் வளர்ச்சிக்காக வகுத்த உத்திகளின் அடிப்படையில் அவரது வார்த்தைகளில் சொல்வதானால் "இரண்டு கால்களில் நடத்தல்" என்பதாகும். அந்தக் கொள்கை சீனாவுக்கு மட்டுமல்ல, இலங்கைக்கு மட்டுமல்ல, அனைத்து நாடுகளுக்கும் பொருந்தும் ஒன்றாகும்.

---

**13ம் பக்கத்தொடர்ச்சி...**

முற்றிலுமாக அவமதித்து, புறக்கணித்து, கூட்டாட்சிக் கொள்கைகளை மீறி, மாநில விவகாரங்களை அபகரித்து, இந்த சட்டங்களை நாடாளுமன்றத்தில் உருவாக்கி நிறைவேற்றியுள்ளது. இடதுசாரிகளும் பிற கட்சிகளைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களும் இந்தச் சட்டங்களுக்கு எதிராக நாடாளுமன்றத்தில் தங்களுடைய கடுமையான எதிர்ப்பைப் பதிவு செய்துள்ளனர். ஆனால் அதிர்ச்சியூட்டும் வகையில் எதேச்சதிகார செயல்முறைகளைப் பயன்படுத்தி இந்த சட்டங்கள் நாட்டின் மீது திணிக்கப்பட்டன.

எங்களுடைய கோரிக்கை மிகவும் தெளிவாக உள்ளது. மூன்று வேளாண் சட்டங்களும் ரத்து செய்யப்பட வேண்டும். அந்தக் கோரிக்கை நிறைவேறும் வரை எங்களுடைய வரலாற்றுப் போராட்டம் தொடரும்.

---

மார்க்சியத்தை மார்க்ஸ் உருவாக்கியதால், மார்க்ஸ் மீது பலருக்கு கோபம் இருக்கிறது. ஆனால் மார்க்ஸ் பிறந்திருக்காவிட்டாலும் இந்தக் கோட்பாடு தோன்றியே இருக்கும். அதன் பெயர் தான் மாறியிருக்கும். அப்பவும் கோபப்படுபவர்கள் இருக்கத்தான் செய்வார்கள், மாறிய பெயர் மீது கோபப்படுவார்கள்.

**–தோழர் ஏவின் மனோ**

# பொருளாதாரத்தை வெற்றி கொள்வதற்கான கொள்கை ரீதியிலான திட்டங்கள் இம்முறை வரவு செலவுத் திட்டத்தில் உள்ளன!

**-இராஜாங்க அமைச்சர் நிமல் லான்சா**

தேசிய மற்றும் சர்வதேச சவால்களுக்கு மத்தியில் எதிர்கால அபிவிருத்தி மற்றும் பொருளாதார இலக்கினை வெற்றி கொள்வதற்கான கொள்கை ரீதியிலான தீர்வுகள் பலவற்றை நிதியமைச்சர் பசில் ராஜபக்ஸ இம்முறை வரவு செலவுத் திட்டத்தில் முன் வைத்திருக்கிறார் என கிராமிய வீதிகள் ஏனைய உள்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சர் நிமல் லான்சா தெரிவித்திருக்கிறார். வரவு செலவுத் திட்டம் சம்பந்தமாக ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு கூறியிருக்கிறார். மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்:




கொவிட் தொற்று காரணமாக முழு உலகிலும் தலைதூக்கிய பொருளாதார, சமூக, அரசியல் சவால்களுக்கு மத்தியில் இம்முறை வரவு செலவுத் திட்டம் முன்வைக்கப்பட்டுள்ளது. ‘சுபீட்சத்தின் நோக்கு’ கொள்கைத் திட்டத்தை உண்மையாக்கும் நோக்குடன் பல விடயங்கள் அதில் முன்மொழியப்பட்டுள்ளன.

நாட்டின் பொருளாதார மேம்பாட்டுக்கான ஒத்துழைப்பினைப் பெறுவதற்காக சிறிய மற்றும் நடுத்தர தொழிற்துறையைக் கட்டியெழுப்புவதற்கு இம்முறை பல வேலைத்திட்டங்கள் வரவு செலவுத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

பெருந்தோட்டத்துறை, பாரம்பரிய தொழிற்துறை, ஆபரணத் தொழிற்துறை மற்றும் நாடாளாவிய ரீதியில் சிறிய முதலீட்டு வலயங்களை அமைப்பதன் மூலம் சிறிய மற்றும் நடுத்தர உற்பத்திகளை ஊக்குவிக்கத் தேவையான சூழலை உருவாக்குவதற்கான பின்னணி கண்டறியப்பட்டுள்ளது.

நச்சுத்தன்மையுள்ள உணவுளிலிருந்து மக்களைப் பாதுகாப்பதற்காக இரசாயன உர பாவனையிலிருந்து சேதன உரப் பாவனையை நோக்கி நகர்வதற்கான வேலைத்திட்டங்களை ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ஸ திட்டமிட்டு முன்னெடுத்துள்ளார்.

விவசாயத்துறையை மேம்படுத்துவதற்காக தொழில்நுட்பத்துக்குள் செல்வது தொடர்பில் இம்முறை வரவு செலவுத் திட்டத்தில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளதோடு, இதன் மூலம் உணவுப் பாதுகாப்பினை உறுதிப்படுத்த முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது.

நாட்டில் வீதிக் கட்டமைப்பைப் பலப்படுத்துவதின் மூலம் நாட்டின் உற்பத்திப் பொருளாதாரம், நாட்டின் எதிர்கால அபிவிருத்தி மறறும் முதலீட்டு ஊக்குவிப்பு என்பவற்றுக்காக சிறந்த உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதற்கான வாய்ப்பு கிடைத்துள்ளது.

குறிப்பாக, கிராமிய வீதிக் கட்டமைப்புகளை சிறந்த முறையில் அபிவிருத்தி செய்வதன் ஊடாக அதனுடன் இணைந்த அனைத்து துறைகளையும் மேம்படுத்த முடியும்.

‘சுபீட்சத்தின் நோக்கு’ கொள்கை திட்டத்திற்கமைய ஒரு இலட்சம் கிலோ மீட்டர் வீதி அபிவிருத்திப் பணிகள் கொவிட் சவாலுக்கு மத்தியிலும் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. அதற்கமைய இவ்வாண்டு 18,000 கிலோமீட்டர் வீதி அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது. அதே போன்று அடுத்த ஆண்டில் 25,000 கிலோமீட்டர் வீதி அபிவிருத்தி செய்யப்படும்.

வறுமையிலுள்ள மக்களின் மற்றொரு தேவை கிராமங்களிலுள்ள பாலங்களை அபிவிருத்தி செய்வதாகும். அதிவேக நெடுஞ்சாலைகள் குறித்து அவதானம் செலுத்தும் போது, கொழும்பு துறைமுக நகர வீதி, கொழும்பு – அத்துருகிரிய அதிவேக வீதி, ருவன்புர அதிவேக வீதி, குருணாகல – தம்புளை அதிவேக வீதி, கொழும்பு – மொரட்டுவ கரையோர வீதி உள்ளிட்ட கொழும்பு நகருக்குள் வாகன போக்குவரத்து நெரிசல் காணப்படுகின்ற வீதிகளில் மேம்பால கட்டமைப்புகளை 2024ஆம் ஆண்டில் நிறைவு செய்து பொதுமக்களுக்கு வழங்க எதிர்பார்த்துள்ளோம். இதற்காக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு இராஜாங்க அமைச்சர் லான்சா கூறியுள்ளார்.

இலங்கையின் 2022ம் ஆண்டுக்கான 76வது வரவு செலவு திட்ட அறிக்கை நாடாளுமன்றத்தில் 12.11.2021 அன்று நிதி அமைச்சர் பஷில் ராஜபக்ஷ தாக்கல் செய்தார்

அவரது அறிக்கையில், 2022ஆம் ஆண்டுக்கான எதிர்பார்க்கப்படும் முழுமையான வருமானமாக 2,284 பில்லியன் ரூபா எனவும், எதிர்பார்க்கப்படும் செலவீனமாக 3,912 பில்லியன் ரூபா எனவும் மதிப்பிடப்பட்டுள்ளது.

இதன்படி, வரவு செலவுத்திட்டத்தில் துண்டு விழும் தொகையாக 1,628 பில்லியன் ரூபாவாக உள்ளது.